பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 தை 14, வெள்ளிக்கிழமை 27.01.2017 கதிர் 83

## திருமலைக் கடலில் 7 புத்தர் சிலைகள்

திருகோணமலை, ஜன.27

திருக்கோணேஸ்வரம் ஆலயத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கடற்பகுதியிலிருந்து 7 புத்தர் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற மீனவர்களால்கடலுக்கு அடியில் இருந்து இவை மீட்கப்பட்டன

பக்கம் 20 >>>

### காணாமல் போனோரின் உறவுகள் மேற்கொண்ட

# வவுனியா உண்ணாவிரதம் நேற்று முடிவுக்கு வந்தது!



### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் நேரில் வந்து எழுத்தில் தந்த உறுதியை அடுத்து

வவுனியா, ஜனவரி 27

**காணாமற்போனவர்களின் உறவினர்கள் வவுனியாவில் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.**

**எதிர்வரும் பெப்ரவரி 9 ஆம் திகதி கொழும்பில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி காணாமற்போனோர் பிரச்சினை தொடர்பாக ஆராயப்படும் எனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நேரில் வந்து வழங்கிய எழுத்து மூல உறுதிப்பாட்டுக்கு அமைய அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.**

கடத்தப்பட்டுகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தைச் சேர்ந்த 14 பேர் கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஆண், பெண் அங்கத்தவர்கள் என 14 பேர் உண்ணாவிரதம் இருந்தனர்.

கையளிக்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதில் கூறு, சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய், பயங்கரவாத தடைச்சட்டத்தை

பக்கம் 19 >>>

## உண்ணாவிரதிகளுக்கு தீர்வு தாருங்கள்! மங்களவிடம் சம்பந்தன் கோரிக்கை

(எஸ்.நிதர்சன்)

காணாமற்போனோரைக் கண்டுபிடித்து தாருங்கள் எனக் கேட்டு உண்ணாவிரதம் இருக்கும் உறவுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தீர்வை ஏற்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கோரினார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் பிராந்திய தூதரக சேவைகளுக்கான பணியகம் யாழ். மாவட்டச் செயலகத்தில்

பக்கம் 20 >>>

## புலம்பெயர்ந்தோர் மீதான தடைகளை நீக்க மங்களவிடம் முதல்வர் விக்கி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.27

"புலம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை முற்றாக நீக்கி, அவர்களையும் இணைத்துச் செயற்படுங்கள்."

யாழ்ப்பாணத்தில் நேற்று வெளிவிவகார அமைச்சின் பிராந்திய அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்கு வருகை தந்திருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் அந்த நிகழ்வில் உரையாற்றுகையில் இவ்வாறு கோரிக்கை

பக்கம் 19 >>>

## சிறை அதிகாரிகள், பொலிஸார் குறித்து சபாநாயகரிடம் விமல் வீரவன்ஸ புகார்!

நாடாளுமன்ற உறுப்பினருக்கான தனது சிறப்புரிமை மீறப்பட்டு வருகின்றது என விமல் வீரவன்ஸ சபாநாயகரிடம் முறையிட்டுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே விமல் வீரவன்ஸ சபாநாயகரிடம்

பக்கம் 20 >>>

## இறைமையுடன் அதிகாரப் பகிர்வு மீண்டும் சம்பந்தன் வலியுறுத்தல்



(எஸ்.நிதர்சன்)

இந்த நாட்டில் சமத்துவம் ஏற்படுவதாக இருந்தால் மக்களது இறைமையின் அடிப்படையில் அதிகாரங்கள்பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பிராந்தியங்களில் வாழ்கின்ற மக்கள் அந்த அதிகாரங்களைப்பயன்படுத்தித்தங்கள் வாழ்க்கையை வளப்படுத்துவதன் மூலம் சுயநிர்ணய உரிமையை அடைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் பிராந்திய சேவைகளுக்கான பணியகம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில்

பக்கம் 20 >>>

## இலங்கைக்கு முன்னுரிமை இந்திய தேசம் அளிக்கும்


### குடியரசு தின நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், ஜன.27

அயல் நாடுகளுக்கு முன்னுரிமை வழங்கும் இந்திய அரசின் புதிய கொள்கையின் கீழ் இலங்கைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 68ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள இந்திய இல்

பக்கம் 20 >>>



அளப்பு அருணாசலம்



அப்ப... அடுத்தமுறை வாக்குறுதி குடுக்க கொழும்பிலை இருந்து ஆர் வரப்போகினமாம்...!

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் எதுவும் செய்யக்கூடாது

## அறுத்து உறுத்துக் கூறுகிறார் பீரிஸ்

உலக நாடுகளைத் திருப்திப் படுத்துவதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்கக் கூடாது; திருத்தவும் கூடாது. மேற்படி சட்டத்தை இல்லாமற் செய்வதற்காக உலக நாடுகள் பலவும் கங்கணம் கட்டி நிற்கின்றன. அரசு அவற்றுக்கு இடமளிக்கக்கூடாது.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத்திருத்தம்செய்வதாயினும் அதற்கான தீர்மானத்தை நாடாளுமன்றமே மேற்கொள்ள வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. – எனவும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், பொது நலப் பாதுகாப்புச் சட்டம் இரண்டும் தேசியப் பாதுகாப்புக்கு மிக முக்கியமானவை என்பதை மறுக்க முடியாது –

அத்தோடு, இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், தூதுவர்கள் இந்த விடயத்தில் மூக்கை நுழைக்க இடமளிக்க முடியாது – என்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தெல்லிப்பழை வைத்தியசாலை சிற்றூழியர் இன்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர்

யாழ்ப்பாணம், ஜன.27

தெல்லிப்பழை வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் 80பேர் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களுக்கான மேலதிகக் கடமை நேரக் கொடுப்பனவு வழங்கப்படாமையே இதற்குக் காரணம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

8மாதங்கள், 6 மாதங்கள், 3 மாதங்கள் என்று பல்வேறு காலங்களுக்குரிய மேலதிக கடமை நேரக்கொடுப்பனவு வழங்கப்படாத நிலையிலேயே தாம் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்தனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பல தடவைகள் அதிகாரிகளுக்குத்தெரியப்படுத்தப்பட்டபோதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி இந்தப் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்ததை அடுத்து அப்போது அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது என்றும், ஆனால் இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ)

# வடமாகாண நீரியல் கொள்கை ஆராயும் மாநாடு நாளை முதல்

வடமாகாணத்தின் நீர்வளத்தை மீட்டெடுத்தல், பாதுகாத்தல், பங்கிடுதல், முகாமை செய்தல் என்னும் விடயப் பரப்புகளை உள்ளடக்கியதாக வடமாகாணத்திற்குப் பொருத்தமான ஒரு நீரியல் கொள்கையை வகுப்பதற்காகச் சர்வதேச மற்றும் உள்ளூர் நிபுணர்கள் கலந்துகொள்ளும் ஆய்வரங்கு அமர்வு நாளை சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் தொடக்க நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

### காணாமற்போனோர் தொடர்பாக என்ன நடவடிக்கை எனக் கேட்டு

# வவுனியா மனித உரிமைகள் அலுவலகம் இளைஞர், யுவதிகளால் நேற்று முற்றுகை



வவுனியா, ஜன.27

வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் வவுனியா மாவட்ட இளைஞர், யுவதிகளால் நேற்று முற்றுகையிடப்பட்டது. காணாமற்போனவர்கள் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு என்ன முடிவு எனக் கேள்வி எழுப்பியே அவர்கள் அந்த அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

''காணாமற்போனோரின் உறவினர்கள் வவுனியாவில் மேற்கொண்ட உண்ணாவிரதம் நான்காவது நாளாக நேற்றுக் காலையும் தொடர்ந்தது. இந்த உண்ணாவிரதத்திற்கு பலரும் ஆதரவு தெரிவித்திருந்த நிலையில், ஐம்பது வரையான இளைஞர், யுவதிகள் திரண்டு நேற்றுக் காலை வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்குச் சென்றனர்.

காணாமற்போனோர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் உங்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?" என அங்கிருந்த அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினர்.

இதன்போது வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பாளர், "எங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இவை தொடர்பில் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அவை எவ்வாறு உள்ளன என உடனடியாகக் கூற முடியாது' என்றார்.

"இது ஒரு பெரிய விடயம். உங்களுக்குத் தேவையான விடயங்களை எழுத்து மூலம் வழங்கினால் எமது கொழும்பு அலுவலகத்தின் அனுமதியுடன் அவை பற்றிய தகவல்களை வழங்க முடியும். அதற்கு கால அவகாசம் தேவை" – எனவும் தெரிவித்தார்.

அவரது பதிலை ஏற்றுக் கொள்ளாத இளைஞர், யுவதிகள் அவரோடு முரண்பட்டனர். இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இருப்பினும் மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரிகள் கேட்டதற்கு இணங்க கால அவகாசத்தை வழங்கிய இளைஞர்கள் பின்னர் அங்கிருந்து அமைதியாக வெளியேறினர். (ம-100)

### காணாமற்போனோரின் உறவுகளுக்கு ஆதரவாக

# முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதம்



வவுனியா, ஜன.27

காணாமல்போன உறவுகளினால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்களால் அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணிக்கு இந்தப் பேரணி இடம்பெற்றது. வவுனியா, வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பித்த இந்தப் பேரணி பசார் வீதி வழியாக மணிக்கூட்டுகோபுர சந்தியை அடைந்து அங்கிருந்து பிரதான தபாலகம் அருகில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் இடத்தை சென்றடைந்தது. அதன் பின்னர் நண்பகல் 12 மணிவரை அவர்கள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 500 பேர் வரையில் இப்பேரணியில் பங்குபற்றியிருந்தனர். இப்பேரணி ஆரம்பமாகிய போது அவர்களின் முச்சக்கரவண்டிகள் வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்தன. இதனால் பொலிஸார் அவர்களுடன் முரண்பட்டனர்.

எனினும், உண்ணாவிரதம் நடைபெறும் இடத்திற்கு அமைதிப்பேரணி நடத்தவுள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர். அதையடுத்து பேரணிக்கு அனுமதி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-100)

# ஊழல், மோசடிகள், வீண்விரயம் தொடர்பாக மக்களிடம் தற்போது விழிப்பு ஏற்பட்டுள்ளது

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



கொழும்பு, ஜன.27

ஊழல், மோசடி மற்றும் வீண் விரயம் தொடர்பாக மக்கள் தற்போது மிகவும் விழிப்புடன் இருக்கின்றார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். மக்கள் மத்தியில் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் இந்த விழிப்புணர்வு உருவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

சுங்க தினத்தின் இவ்வருட தொனிப்பொருளான 'பயனுள்ள தேசவரைறைகளின் முகாமைத்துவத்திற்கான தரவுப் பகுப்பாய்வு' என்பதை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சுங்க தினத்தை கொண்டாடும் வகையில் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் நேற்று முற்பகல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தையும், ஒழுக்கமான சமூகத்தையும் கட்டியெழுப்பும் பணிகளில் சுங்கத் திணைக்களத்தின் செயற்பணி பரந்துபட்ட எல்லைகளுக்குள் காணப்படுகின்றது எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

போதைப்பொருள் ஒழிப்புக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கு சுங்கத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஒத்துழைப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டுவரப்படும் போதைப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளின்போது சுங்க திணைக்களம் மேற்கொள்ளும் பணிகளையும் பாராட்டினார்.

சர்வதேச சுங்க நிறுவனத்தின் தகைமை சான்றிதழ்களும் ஜனாதிபதியினால் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, சுங்க பணிப்பாளர்நாயகம் சூலானந்த பெரேரா உள்ளிட்ட சுங்கத் திணைக்களத்தின் அலுவலர்களும் பங்குபற்றினர். (ம)

# கலாசாலை பயிற்சி ஆசிரியர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியீடு

ஆசிரிய கலாசாலை முடித்து பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருந்த பயிற்சி ஆசிரியர்களின் பெறுபேறுகள் நேற்று வியாழக்கிழமை வெளியாகின.

பெறுபேறுகள் தாமதமானதற்கு சில ஆசிரிய கலாசாலைகள் உள்ளக மதிப்பீட்டு புள்ளிகளை அனுப்ப தாமதமானதும் ஒரு காரணம் என பரீட்சைகள் திணைக்களத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.


பரீட்சை எழுதிய ஆசிரியர்கள் தமது பெறுபேறுகளைக் கலாசாலைகளில் பார்வையிடமுடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏனைய கலாசாலைகளும் பரீட்சை பெறுபேறுகள் தாமதமாவதற்கு இனிமேல் காரணமாக அமையக்கூடாது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். (ம)

# காணாமற்போனோரின் உறவுகள் முன்னெடுத்த உண்ணாவிரதத்துக்கு பல தரப்பிலிருந்தும் ஆதரவு







வவுனியா, ஜன.27

காணாமற்போன உறவுகளால் வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மாலை நிறைவுக்கு வந்தது.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் காணாமற்போன உறவினர்கள் 14 பேர் வவுனியா பிரதான தபால் நிலையம் அருகில் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்களில் நால்வரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்திருந்தது.

இவர்கள் மழை, கடும் பனி என்பனவற்றுக்கு மத்தியில் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்து வந்த நிலையில் இவர்களுக்கு ஆதரவாக அரசியல் கைதிகளின் உறவினர்கள் இருவரும் உண்ணாவிரதத்தில் இணைந்து கொண்டனர்.


இந்தப் போராட்டத்துக்கு வவுனியா மாவட்ட வர்த்தகர்கள், ஓட்டோ உரிமையாளர்கள், சிவில் அமைப்புக்கள், இளைஞர்கள், மற்றும் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட காணாமற்போனவர்களின் உறவினர்கள் எனப் பலரும் வருகை தந்து ஆதரவு வழங்கினர்.

போராட்டத்தில் ஈடுபவர்களுக்கு ஆதரவாக சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை தமது கைகளில் காணாமற்போன உறவினர்களின் புகைப் படங்களை ஏந்தியவாறு அடையாள உண்ணா விரதத்தில் ஈடுபட்டதால் வவுனியா மாவட்டமே சோகத்தில் மூழ்கியது.

நேற்று பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான கமலேஸ்வரன், செ.மயூரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பாஸ்கரா மற்றும் பல்வேறு அரசியல் கட் சிப் பிரமுகர்களும் வருகைதந்து தமது ஆதரவை வழங்கினர்.

நேற்று மாலை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜே வர்த்தன நேரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுக்களை நடத்தியதை அடுத்து போராட்டம் நேற்று மாலை நிறைவுக்கு வந்தது.

(ஐ-100)



பனிக்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற லொறி விபத்தில் இருவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இராணுவத்தினருக்கான உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற பாரவூர்தி வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதி யோரம் நின்ற மரத்துடன் மோதி வீதியில் சரிந்து நாற்பது மீற்றர்வரை இழுத்துச்செல்லப்பட்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் சாரதி, நடத்துநர் ஆகியோர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-70)

## மருத்துவ மாணவர் இன்று நடை பயணம்!

யாழ்ப்பாணம், ஜன.27

இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவையின் தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு யாழ்ப்பாண மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை நடைபயணம் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த நடைபயணம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்து யாழ்.மாவட்டச் செயலகத்தை நோக்கி இடம்பெறும். அதன் முடிவில் யாழ்.மாவட்டச் செயலர் மற்றும் வடமாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மனு கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் மருத்துவக் கல்லூரியான SAITM இற்கும் ஆட்சேபம் தெரிவித்தே இந்த நடை பயணம் முன்னெடுக்கப்படுகின்றது. (உ-21)

## 2017 உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.27

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று 2017 ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் இரண்டாவது தடவையாகத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யுமாறு பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களைப் பிரதி அதிபரிடம் பெற்று எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மெய்வன்மைப் போட்டி

தெல்லிப் பழை,ஜன.27

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் எம். மணிசேகரன் தலைமையில்இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் தே.சுரேஷ்குமார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை கோட்டக்கல்வி அதிகாரி மா.ஆனந்தகுமார் மற்றும் கல்லூரியின் பழைய மாணவர்களான அ.விமலதாசன், ந.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-21)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஜன.27

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் தை மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வெளியீட்டுரையையும், புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ. சிவநாதன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (ஐ-30)

# நீரிழிவு நோயின் தாக்கம் யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு

## மருத்துவர் சுரேந்திரகுமார் சுட்டிக்காட்டு

யாழ். மாவட்டத்தில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. மக்களிடையே தற்போது இனிப்புப் பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. சீனிப் பண்டங்களையே அதிகம் விரும்பி உண்கின்றனர். இதுவே இந்த நிலைக்குக் காரணம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் இ.சுரேந்திரகுமார்.

யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் சங்கானை பிரதேச செயலகத்தில் நீரிழிவு விழிப்புணர்வுச் செயலமர்வு இடம்பெற்றது.

பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில்தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

நீரிழிவு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒவ்வொருவருக்கும் சுயகட்டுப்பாடு அவசியம்.



இந்த விடயத்தில் நீரிழிவுக் கழகத்தினர் போன்று பொது அமைப்புகளும் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும்.

இது தொடர்பான நடவடிக்கைகளைவிரைந்து எடுக்காது விட்டால் பெரும் விளைவுகளை நாம் எதிர்கொள்ள வேண்டியவர்களாகிவிடுவோம்.-என்றார்.

இந்த நிகழ்வில் நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கல் உரையாற்றுகையில்:-

நிரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முதலில் நாம் சீனிப்பாவனையைக் குறைக்க வேண்டும். சீனிப் பண்டங்களையும் சீனிப் பானங்களையும் தவிர்த்து அளவுடன் போசனை மிக்க உணவுகளை உட்கொண்டு மன அழுத்தத்தை விலக்கி வாழ்ந்தால் நீரிழிவை விரட்ட முடியும்.-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவுச்சிகிச்சை நிலைய வைத்தியர் பரமேஸ்வரன் நீரிழிவு தொடர்பான விளக்கங்களை படங்களுடன் விவரித்தார். (ஐ)

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முள்ளிவாய்க்காலின் வரிசையில்...

சிரியாவின் அலப்போ நகரின் மீது நடத்தப்பட்ட மிக மோசமான - மிகக் கொடூரமான - தாக்குதல்களில் நான்கு லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். பெண்களும், குழந்தைகளும் கூடக் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப் பட்டிருக்கின்றார்கள்.

சிரியாவின் மிகப்பெரிய நகரம் ஒன்று சீரழிக்கப்பட்டிருக்கின்றது. ஆயிரம் ஆண்டுகால இஸ்லாமிய நாகரீகத்தின் மையக் களம் - அந்தப் பச்சைப் பாரம்பரியத்தின் நிலைக்களன் - நாசமாக்கப் பட்டிருக்கின்றது. பாடசாலைகள், வைத்தியசாலைகள், பொது மக்களின் இல்லங்கள், சமூக மையங்கள் எல்லாம் சிதறடிக்கப்பட்டு சாம்பல் மேடுகளாகியிருக்கின்றன.

ஏனிந்த அழிவு? ஏனிந்த கொடூரம்? ஏனிந்த கோரம்? இந்தப் பேரவலத்தை உலகம் பார்த்திருப்பது ஏன்?

மனித நேயத்துக்கு எதிரான போர்க்குற்றங்கள் குறித்து அதிகம் பேசும் சர்வதேசம் ஏன் இதைப் பார்த்து மௌனித்து நிற்கின்றது?

சிரியாவை ஆளுவது ஆஸாத் அரசாங்கம். அதனை எதிர்த்து புரட்சி செய்வது இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ்.

இந்தத் தீவிரவாத அமைப்பிடமிருந்து - அதன் கட்டுப்பாட்டில் இருந்த - மிகப் பெரிய நகரான அலப்போவை சிரியப் படைகள் மீளக் கைப்பற்றவே இந்த அட்டூழியங்கள் எல்லாம்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தோற்றத்தின் மூலவேரை அல்லது அது ஒரு பயங்கர சக்தி வாய்ந்த ஆயுத அமைப்பாகப் பரிணமித்ததின் மூலத்தைத் தேடுவோமானால், அங்கு அமெரிக்க சி.ஐ.ஏயின் கைகள் இருப்பதைக் காணமுடியும்.

சிரியாவை ஆளும் ஆஸாத் அரசு மீது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகுக்கு காழ்ப்புணர்ச்சி. அதற்குத் தொல்லை கொடுப்பதற்காக மேற்குலகின் மறைமுக ஆசீர்வாதத்துடன் உருவாக்கம் பெற்றதே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு.

ஆனால், இப்போது ஆஸாத் அரசு, ஐ.எஸ்.ஐ.எஸ். இரண்டுமே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகுக்கு வேண்டாத தரப்புக்களாகி விட்டன.

ரஷ்யா மட்டும் ஆஸாத் அரசுடன் கைகோத்து நிற்கின்றது.

ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பை அழிப்பதற்காக எத்தனை லட்சம் பொது மக்கள் கொல்லப்பட்டாலும் கவலையில்லை, விடயத்தை நடத்தி முடியுங்கள் என்று கைகட்டிப் பார்த்திருக்கின்றது உலகம். பேரழிவைத் தரும் ஆயுதங்களோடு விமானங்களை அனுப்பி தன்நாட்டு மக்களையே ஆஸாத் அரசு கொன்றொழிப்பதற்கு உதவுகிறது ரஷ்யா.

இதுபோன்றுதானே, முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறுத்தப்படும் வரை இலங்கை அரசு செய்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் துடைத்தழிப்பதற்காக எத்தனையாயிரம் பொது மக்களையும் கொன்றொழிக்கலாம் என்று அனுமதித்து, சர்வதேசம் பார்த்திருந்தது இதைத்தானே...?

''என்ன (உயிர்ச்) செலவானாலும் யுத்தத்தை முற்றாக நடத்தி முடியுங்கள்'' - என்று அயலகம் உட்பட சர்வதேசம் அனுமதியும், இராஜதந்திரப் காப்பீடும் வழங்கி, மஹிந்த அரசைப் பாதுகாத்து, கொடூர யுத்தத்தைத் தமிழர்கள் மீது ஏவிவிட்டு பார்த்திருந்ததும் இது போன்ற ஒரு செயற்பாடுதானே...?

உலகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. மனித நேயம் குறித்தும், மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றியும் அரசுகளின் தார்மீகப் பொறுப்புகள் குறித்தும் பேசுகின்ற அரசுகள் எல்லாம் அவற்றின் வழி நடப்பவையல்ல. அதுதான் உலக நியதி என்றாகி விட்டது.

"வரலாறு காணாத கிரிமினல் தாக்குதல்கள் போர்க் குற்றங்களாக அலப்போவில் அரங்கேறின" - என்று கூறும் ஐக்கிய நாடுகள் சபை எனும் சர்வதேச அமைப்பினால் கூட, இந்தப் பேரழிவுகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. உலக நாடுகளின் ஒன்றிணைந்த பொதுமன்றத்தினால் கூட இந்தப் பேரழிவுத் தாக்குதல்களைக் கைகட்டிப் பார்த்திருந்த பின்னர் அறிக்கை விட மட்டுமே முடிந்திருக்கின்றது.


'மேற்கத்திய நாடுகள் மேலானவை. மனித மாண்புகளை - விழுமியங்களை மதிப்பவை. ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றைப் பேணிப் பாதுகாப்பவை' - என்றெல்லாம் கூறப்பட்டாலும் கூட, அலப்போ நகரில் அரங்கேறிய அட்டூழியங்களும், அவற்றை பார்த்திருந்த மேற்குலகின் பண்பியல்பும் அந்த மதிப்பார்ந்த மேற்குலகச் சிறப்பை அடியோடு தகர்த்துவிட்டன என்பது முழு உண்மை.

நேரடியாக மனிதர்களின் கழுத்தை அறுத்துக் கொல்லும் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற அமைப்பின் பயங்கரவாதிகள் மட்டுமல்லர், ஜனநாயகப் போர்வைக்குள் ஒளித்தபடி சர்வதேச அரசியலை இயக்கும் 'ஜனநாயக அரசுகள்' கூட ஒரு வகையில் 'ஜனநாயகப் பயங்கரவாதிகளே' ஆகும்.

உலக மக்களைக் கொன்றொழிக்கும் செயற்பாடுகளில் நேரடியாகச் சம்பந்தப்படும் - அல்லது மறைமுகமாகப் பின்புலத்தில் இருந்து அதனைத் தூண்டிவிடும் - பல நாடுகளும் கூட தமது நாட்டின் பெயரை 'ஜனநாயகக் குடியரசு' என்றோ... அல்லது 'ஜனநாயக அரசு' என்றுதான் அழைக்கின்றன.

அதுதான் இங்கு கேலிக் கூத்தான விடயமாகும்.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறுத்தப்பட்ட போது, அங்கு தமிழர்களின் உயிர்கள் பல பத்தாயிரங்களாகக் காவு கொள்ளப் பட்டன. அது இப்போது அலப்போவில் பல லட்சங்களாக மாறியுள்ளது. பூமிப்பந்தின் இன்னோர் இடத்தில் அது மில்லியன்களில் கடந்தாலும் - நடந்தாலும் - உலகம் கண்டு கொள்ளுமா என்பது பென்னம் பெரிய கேள்விக் குறியே.




## சாதாரண, உயர்தரப் பரீட்சை; ஒரே சமயத்தில் நடத்த ஏற்பாடு

கொழும்பு ஜன.27

சாதாரணதரப் பரீட்சைகளையும், உயர்தரப் பரீட்சைகளையும் டிசெம்பர் மாதத்திலேயே நடத்துவது குறித்து, அரசாங்கம் பரிசீலனை செய்யலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களை அனுமதிப்பதில் தேவையற்ற தாமதம் ஏற்படுவது குறித்து எதிர்க்கட்சியின் பிரதம கொறடா அனுரா குமார திஸாநாயக்க விடுத்த கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்களைப் பல்கலைக் கழகங்களில் விரைந்து சேர்ப்பதே பொருத்தமான நடைமுறை. தாம் கல்விபயின்ற காலத்தில் உயர்தரப் பரீட்சையில் டிசம்பரில் சித்தியடைந்த போதிலும் அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதத்திலேயே பல்கலைக்கழகத்தில் சேரமுடிந்ததாகவும் பிரதமர் ரணில் சுட்டிக் காட்டினார்.

கல்வி அமைச்சரையும் பரீட்சைத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகளையும் அழைத்து வேண்டாத கால இழுத்தடிப்பைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை முடிவுகள் நீண்ட நாள்களின் பின்னர் வெளியிடப்பட்டதால் 700 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## ஆயுர்வேதத் திணைக்களம் அமைப்பதற்கு நடவடிக்கை

### சுகாதாரப் போசாக்கு அமைச்சர் சேனாரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஜன.27

ஆயுர்வேத வைத்தியர்களுடன் கூடிய ஆயுர்வேதத் திணைக்களம் ஒன்று அமைக்கப்படும் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மருத்துவ திருத்தச்சட்ட மூல விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஆயுர்வேத வைத்தியர்களை நிர்வாகத்தில் இணைத்துக் கொள்வது இதன் நோக்கம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''சுகாதாரத் திணைக்களத்தைப் போன்று ஆயுர்வேத திணைக்களமும் முறையாக முன்னெடுக்கப்பட இருக்கிறது. இலங்கை மருத்துவப் பேரவையைப் போன்று ஆயுர்வேத மருத்துவப் பேரவையும் அமைக்கப்படும்.''- என்றார்.

இதேவேளை, விவாதத்தில் கலந்து கொண்ட பிரதியமைச்சர் பைசல் காஸிம் கூறுகையில்;

மருத்துவ திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக பல் மருத்துவ சேவையை முறையான விதத்தில் முன்னெடுக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறினார்.

இதன் மூலம் பல் வைத்தியர்களுக்கும், நோயாளர்களுக்கும் சிறப்புச் சலுகைகள் கிடைக்கும் என்று அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (எ)

## அரச சேவையாளருக்கு மீண்டும் கொடுப்பனவு அதிகரிக்கப்படும்

கொழும்பு, ஜன.27

அரச சேவையாளர்களின் தொழிற் தரத்தை மையமாகக் கொண்டு அவர்களுக்கு மீண்டும் கொடுப்பனவை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

அந்தவகையில் அவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவில் 2 ஆயிரம் ரூபா தொடக்கம் 16 ஆயிரம் ரூபா வரை மீண்டும் அதிகரிக்கப் படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு அதிகரிப்பு இம்மாதத்திலிருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக தேசிய தொழிற் சங்க முன்னணியின் தலைவர் சமன் ரத்ன பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள அரச மருந்தாளர் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ)

## உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோர் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜன.27

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இந்த ஆண்டில் தோற்றவுள்ள மாணவர்களிடம் பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அடுத்தமாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன.

எனவே, பாடசாலை மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள், விண்ணப்பப்படிவங்கள் தபாலிடப்பட்டுள்ளன எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தனியார் பரீட்சார்த்திகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவங்கள் தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்றும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

## நாளை

28.01.2017
சனிக்கிழமை
நட்சத்திரம் : திருவோணம் மு.இ 11.45 வரை
திதி : அமாவாசை காலை 6.46 வரை
சுபநேரம் : 3.36 – 5.06 வரை
இராகுகாலம் : 9.36 – 11.06 வரை

# 8 ஆவது சர்வதேச வர்த்தகச் சந்தை யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாணத்தில் 8 ஆவது தடவையாகச் சர்வதேச வர்த்தகச் சந்தை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாபெரும் நிகழ்வு மிகப் பெரிய கண்காட்சி மற்றும் நுகர்வோர் சந்தை நிகழ்வாக வடக்கிலுள்ள மக்களால் கருதப்படுகின்றது.

இந்தக் கண்காட்சி நிகழ்வு இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு யாழ். மாநகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று யாழ். வர்த்தகத் தொழில் துறை மன்றத் தலைவர் வீ.கே. விக்னேஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவித்துள்ளவை வருமாறு:-

யாழ். மாநகர சபை, இலங்கை மாநாட்டு பணியகம் மற்றும் சர்வதேச வர்த்தக சபை ஆகியவற்றின் ஆதரவுடன், யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவை நிறுவனத்தால் சர்வதேச வர்த்தக கண்காட்சி -2017 நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரகம் மற்றும் தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் ஆகியனவும் இதற்கு அங்கீகாரமளித்துள்ளன.

பல்வேறுபட்ட தேவைகள் மற்றும் சேவைகளை ஈடு செய்யும் வகையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச கண்காட்சிக் கூடங்கள் இந்த வர்த்தகச் சந்தையில் இடம்பெறவுள்ளன.

பரந்த அளவிலான முதலீட்டாளர்கள் மற்றும் குடிமக்கள் விசாலமான எண்ணிக்கையில் ஒன்றுகூடும் ஒருதனித்துவமான நிகழ்வாகஇதுகருதப்படுகின்றது.

வடக்கிலுள்ள குடிமக்கள், வியாபாரிகள், வர்த்தகர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் என்று அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டிய நிகழ்வாக இந்தக் கண்காட்சி அமையவுள்ளது.

இதில் பல்வேறுபட்ட உள்ளூர், உள்நாட்டு, வெளிநாட்டு கண்காட்சிக் கூடங்கள் இடம் பெறவுள்ளன. கடந்த ஆண்டு நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில்60ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் வருகைதந்து பார்வையிட்டனர். அதே போன்று இம் முறையும் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் உள்ளூர் வர்த்தகர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.



மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் உயர் கல்விக் கண்காட்சியும் செயலமர்வுகளும் நடைபெறவுள்ளன.

வடக்குக்கான நுழைவாயில் என்று அழைக்கப்படும் இந்தக் கண்காட்சி தெற்கு மற்றும் வடக்கு இடையில் வர்த்தக ரீதியான இணைப்பை ஏற்படுத்துவதில் கூட்டு வியாபார முயற்சிகள் ஒன்றிணைவுகள் பாரியளவிலான கோரல்கள் ஆகியனவும் இதன் மூலம் ஏற்படுத்தப்படவுள்ளதுமே சிறப்பம்சமாகும்.

இவ்வாறு பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியதாக நடைபெறுகின்ற இக் கண்காட்சியில் அனைத்து தரப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு மீண்டும் அழைப்பு விடுக்கின்றோம். ஆயினும் இதில் கலந்து கொள்பவர்களில் பாடசாலைச் சீருடைகளுடன் வருகை தருகின்ற மாணவர்களுக்கு மட்டும் இலவசம் என்பதுடன் ஏனையவர்களும் 30 ரூபா நுழைவுச் சீட்டும் அறவிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை நான்கு மணிக்கு இந்தியாவிலிருந்து வருகை தருகின்ற முதலீட்டாளர்களுக்கும் யாழ். வர்த்தகர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது இதில் அனைத்து வர்த்தகர்களும் கலந்து கொள்ளலாம்.

2017 ஆம் ஆண்டுகண்காட்சியின் போது அதற்கு இணையாக வேறு பல நிகழ்வுகளையும் ஏக காலத்தில் நடத்துவதற்கு இதன் ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

பிரபல இசைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் இசைநிகழ்ச்சிகள் 2 தினங்களாக இடம்பெறவுள்ளன. கண்காட்சிக்கு முன்னதாக வீதியுலா, சிறுவர்களுக்கான கொண்டாட்ட நிகழ்வு, பொழுது போக்கு பூங்கா மற்றும் பலவும் அதன் சிறப்பம்சங்களாகும்.

அனைத்து வர்த்தகத் தேவைகளையும் ஒரே இடத்திலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு நிகழ்வாக இது அமைந்துள்ளது.-என்றார். (ஐ-112)

## பழைய மாணவர்கள் பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நிகழ்வில் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் பழைய மாணவர்சங்கத்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-21)

* * *

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வள்ளியம்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தலைவர் என்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை பழைய மாணவன் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் நிகழ்த்துவார். (ஐ)

## ஞாயிறன்று சத்சங்கம்

யாழ்ப்பாணம், ஜன.27

மருதனார் மடம் வீதி, உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் சத்சங்கம் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

சுவாமி சர்வரூபானந்தஜி இந்த நிகழ்வில் ஆன்மீக உரை நிகழ்த்தவுள்ளார்.

பிரார்த்தனை, தியானம், பஜனை, வாசிப்பு, ஆரத்தி என்பனவும் இடம்பெறும். (ஐ)

## இலவச கண்சிகிச்சை முகாம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஜன.27

கரணவாய் மேற்கு மற்றும் அயற்கிராம மக்களின் நலன் கருதி வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கண்சிகிச்சை முகாமும், பொது மருத்துவ முகாமும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கரணவாய் மகாவித்தியாலயத்தில் இடம் பெறும். (ச)

## சுதேச மருத்துவ மாநாடு கைதடியில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.27

வட மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் என்பன இணைந்து தேசிய சுதேச மருத்துவ மாநாடு மற்றும் கண்காட்சியை இன்று வெள்ளிக் கிழமை கைதடியில் உள்ள யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பிரிவில் ஆரம்பித்து வைக்கவுள்ளன.

இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வட மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், மகரகம ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் திலகரட்ண ஆகியோர் கலந்து கொள்வர்.

நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-21)

## 100 ஆவது இதழ் ஜீவநதி வெளியீடு

ஜீவநதி 100 ஆவது இதழ் (ஈழத்துப் பெண் எழுத்தாளர் சிறப்பிதழ்) வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.15 மணிக்கு வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் எழுத்தாளர் சாகித்திய ரத்தினா தெணியான் தலைமையில் இடம் பெறும்.


இந்த நிகழ்வில் வரவேற்புரையை ஜீவநதி துணை ஆசிரியர் வெ. துஷ்யந்தனும், வெளியீட்டுரையை யாழ். தேசியகல்வியியற்கல்லூரி உப பீடாதிபதி கலாநிதி பா.தனபாலனும், கருத்துரைகளை எழுத்தாளர் இ.இராஜேஸ்கண்ணன், எழுத்தாளர் வேல் நந்தகுமார், எழுத்தாளர் திருமதி எஸ்.தனேஸ்வரி, பேராசிரியர் செ.யோகராசா ஆகியோரும் நிகழ்த்துவர்.

சிறப்பாக மூத்த பெண் எழுத்தாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறும். மதி கலர்ஸ் உரிமையாளர் சி.சதீஸ் கௌரவிப்பை வழங்குவார். (ச)



# கிழக்கில் வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுரிமை

## கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிப்பு



திருகோணமலை,ஜன.27

கிழக்கு மாகாணத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் வருடந்தோறும் ஏற்படும் வெள்ளப் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட உள்ளது.

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் முக்கிய அரச அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


கிழக்கில் மழைக்காலங்களில் அடிக்கடி பல இடங்கள் வெள்ள நீரில் மூழ்குகின்றன. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு முறையான வடிகான் கட்டமைப்புக்களை நிர்மாணிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இந்தத் திட்டத்தின் ஊடாக அடிக்கடி மழைக்காலங்களில் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட உள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் விரைவில் நிவர்த்திக்கப்படும்.

தற்போது கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பற்றாக்குறை காணப்படுவதால் இந்தத் திட்டத்துக்கான நிதியை மத்திய அரசாங்கத்தினூடாகப் பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட உள்ளன.-என்றார்.

கிழக்கில் வெள்ள நீர் வடிந்தோடும் வகையில் முறையான வடிகான் கட்டமைப்பை நிறுவுவதற்கான திட்டம் குறித்த விடயங்களை விரைவில் சமர்ப்பிக்குமாறு செயலாளர் யூ. எல். ஏ அஸீஸ் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார் என்பதும் குறிப்பித்தக்கது. (ச)

# கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் 363 பேருக்கு அதிபர் நியமனங்கள்



திருகோணமலை,ஜன.27

கிழக்கு மாகாணத்தில் அதிபர் சேவை மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 363 பேருக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் புதன் கிழமை திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் வழங்கினார்.

இதில் சிங்கள மொழி மூலமாக 87 பேருக்கும், தமிழ் மொழி மூலம் 246 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் மற்றும் காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, சுகாதார அமைச்சர் நஸீர், பிரதம செயலாளர் அபய குணவர்த்தன, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ நிசாம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# நுளம்பு பெருகும் சுற்றுச் சூழல்; நால்வருக்கு வழக்கு

களுவாஞ்சிக்குடி,ஜன.27

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடிப் பகுதியில் நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை அசுத்தமாக வைத்திருந்த 4 பேருக்கு எதிராக களுவாஞ்சிக்குடிச் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது என்று க்ளுவாஞ்சிக்குடிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ரவிகரன் தெரிவித்தார்.

நகரைச் சுத்தம் செய்தலும், நுளம்புகளிலிருந்து பாதுகாத்தலும் தொடர்பான சுகாதார வேலைத்திட்டம் களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 4 பேர் அடையாளம் காணப்பட்டனர். மேலும், தொற்றுநோய் தடுப்புச் சட்டத்தின் கீழ் 14 பேருக்கு எச்சரிக்கைக் கடிதங்களும் வழங்கப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வெள்ளத்தில் மூழ்கிய கிரான் பிரதான வீதி இயந்திரப் படகுச் சேவை தொடர்கிறது!



மட்டக்களப்பு,ஜன.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக கிரான் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனை அடுத்து பொதுமக்களின் போக்குவரத்துக்காக இயந்திரப் படகுச் சேவை கடந்த இரு தினங்களாக இடம்பெற்று வருகிறது.

கிரான் தொடக்கம் புலிபாய்ந்தகல் பிரதேசம் வரைக்குமான சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம் இந்தப் படகுச் சேவை நடைபெறுகிறது.

கிரான் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையில் இரண்டு படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ச)

# குச்சவெளியில் ஆயிரம் பேருக்கு காணி அனுமதிப்பத்திரங்கள்

திருகோணமலை,ஜன.27

திருகோணமலை குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புல்மோட்டைப் பிரதேசத்தில் வசிக்கும் ஆயிரம் பேருக்கு குடியிருப்புக் காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை இவர்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்களைக் கிழக்கு மாகாணக் காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி வழங்கினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் புல்மோட்டைப் பகுதியில் புனித பூமிக்கென சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் அளவிட முற்பட்ட போது, அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டு அதனைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

அந்தக் காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களே தற்போது வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

திருகோணமலை,ஜன.27

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவிலுள்ள பலசரக்குக் கடை ஒன்றை உடைத்து அதிலிருந்த பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் 23 மற்றும் 25 வயதுகளையுடைய இளைஞர்கள் இருவரை நேற்று வியாழக்கிழமை அதிகாலை பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# கிழக்கு பல்கலையின் கற்றல் நடவடிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் ஆரம்பம்

## மாணவர்களுக்கு எதிரான வழக்கை கைவிடத் தீர்மானம்

மட்டக்களப்பு,ஜன.27

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான வழக்கை இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் கைவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக பீட 2 ஆம், 3 ஆம் வருட மாணவர்களுக்கான விடுதி வசதிகள் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 18 ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், தொடர்ச்சியாக தமது உடைமைகளுடன் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்துக்குள் தங்கியிருந்தனர்.

மாணவர் ஒன்றியத்தின் தூண்டுதலாலே வர்த்தக பீடம் 2 ஆம், 3 ஆம் வருட மாணவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என பல்கலைக்கழக நிர்வாகம் குற்றம் சாட்டியிருந்தது. மாணவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக அதிருப்தி அடைந்த பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த அனைத்து மாணவர்களையும் வெளியேறுமாறு அறிவித்திருந்தது.

வன்முறையில் ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்ததை அடுத்து நிர்வாகக் கட்டடத்துக்குள் தொடர்ச்சியாகத் தங்கியிருந்த மாணவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மோகன் டி.சில்வா நேற்று முன்தினம் புதன் கிழமை கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்து நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதனை அடுத்தே பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை 31 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவும், மாணவர்களுக்கு எதிரான வழக்கை இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் கைவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுக்கான விடுதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளன என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (ச)

மணமக்கள்
☎0114320017- 8

அலுவலக நேரம்
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 3847 \| மு<br>1981 \| நுவரேலியா \| 183 Cm<br>Business \| இலங்கை \| சூரிசெவ்: 10<br>உத்திரட்டாதி (மீனம்) \| கி.பா: 14 | 7165 \| வே<br>1991 \| கந்தர்மடம் \| 165 cm<br>BMS Studying \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 33 \| செவ்: 7 |
| 4404 \| வி<br>1981 \| மாவிட்டபுரம் \| 168 cm<br>Jewelry Shop \| இலங்கை<br>பூரட்டாதி (கும்பம்) \| கி.பா: 11 | 4973 \| வே<br>1990 \| காரைநகர் \| 150 cm<br>Sub master (Gov) \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 61 \| செவ்: 8 |
| 3433 \| கு<br>1981 \| பருத்தித்துறை \| 163 cm<br>Teacher \| இலங்கை<br>திருவோணம் (மகரம்) \| கி.பா: 36 | 4018 \| ப<br>1988 \| அல்வாய் \| 167 cm<br>Teacher \| இலங்கை<br>அஸ்வினி (மேடம்) \| கி.பா: 12 செவ்: 12 |
| 5460 \| வே<br>1980 \| கொக்குவில் \| 180 cm<br>Health Coordinator \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா:18 \| செவ்: 12 | 6242 \| வே<br>1988 \| மானிப்பாய் \| 163 cm<br>Online Accountant \| இலங்கை<br>பூரட்டாதி (கும்பம்) \| செவ்: 12 |
| 4909 \| வே<br>1978 \| அராலி \| 168 cm<br>Teacher \| இலங்கை<br>அத்தம் (கன்னி) \| கி.பா: 36 \| செவ்: 7 | 7089 \| கோ<br>1986 \| கந்தரோடை \| 150 cm<br>இலங்கை<br>திருவாதிரை (மிதுனம்) \| செவ்: 04 |

அருந்ததி
www.arunthathee.com | 077 716 45 24
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

# பிணைமுறி தொடர்பில் தவறிழைத்தவர்கள் எவரானாலும் தண்டனை வழங்கத் தயார்!

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.27

பிணைமுறி சம்பவம் தொடர்பில் தவறிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டனை வழங்கத் தயாராக இருக்கிறோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி அபேயராமவில் விஹாரையில் அமைக்கப்பட்டுள்ள 54 அடி உயரமான புத்தர் சிலை ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்தியவங்கி பிணைமுறி தொடர்பான சம்பவத்தை மூடி மறைப்பதற்கே ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆனால், நான் இதை முற்றாக நிராகரிக்கிறேன.

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது தவறிழைத்தவர்களுக்கு தண்டனையை வழங்குவதற்கேயாகும். இரண்டு வருட காலப்பகுதிக்குள் பிணை முறி சம்பவம் தொடர்பாக விசாரணையை நடத்தி



தண்டனைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற ஊழல் மோசடியுடன் கூடிய நிர்வாகத்திலிருந்து தாம் வெளியேறியமை அவ்வாறான ஒரு நிர்வாகம் மீண்டும் நாட்டில் ஏற்படக் கூடாது என்பதற்கேயாகும்.

பொறுப்பு மற்றும் கடமையை நேர்மையான முறையில் நிறைவேற்றுவது மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட எமது பொறுப்பாகும். பிணைமுறி சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதத்தை முன்னெடுக்கும் போது, ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தியமையே இடம் பெற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமரபுர மகாவிகாரையின் மகாநாயக்கர் அதிவணக்கத்திற்குரிய தவுல்தென ஞானீஸ்ஸர தேரர், வணக்கத்திற்குரிய கொடுகொட தம்மாவாச நாயக்க தேரர், வணக்கத்திற்குரிய பெல்லன்வில விமலரதன அனுநாயக்க தேரர், நாராஹேன்பிட்டிய அபயராம விகாரையின் விகாராதிபதி வணக்கத்திற்குரிய முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்ட தேரர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருந்தொகையான பக்தர்களும் கலந்துகொண்டனர்.



# ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்வதற்கு பிள்ளையானே உத்தரவிட்டார்!

## சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்

கொழும்பு, ஜன.27

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் உத்தரவின் பேரிலேயே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளில் இது தெரியவந்துள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பிள்ளையான், ஓர் ஆண்டுக்கு மேலாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் தனது தடுப்புக்காவலுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

பிணையில் விடுவிக்க உத்தரவிடுமாறு அவர் உயர்நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பாக உயர்நீதிமன்றத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

இந்த அறிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்ய, சாந்தன் என்பவருக்கு பிள்ளையானே உத்தரவிட்டார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்திருக்கிறது என்றும், அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

பிள்ளையான் தரப்பில் முன்னிலையான சட்டவாளர் இதனை நிராகரித்ததுடன், இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்த சாட்சியமும் இல்லை என்றும் வாதிட்டுள்ளார்.

இதனை அடுத்து இந்த வழக்கை எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதிக்கு உயர்நீதி மன்றம் ஒத்திவைத்துள்ளது.

# அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா கவலை



கொழும்பு, ஜன.27

சமகால அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர கவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே ஹிருணிகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வீதியில் நடந்து செல்ல முடியவில்லை. மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளித்தவர்கள் என்ற வகையில் எம்மால் பதிலளிக்க முடியவில்லை.

முன்னைய ஆட்சியை ஒழிக்கவும் புதிய ஆட்சியை ஏற்படுத்தவும் முயற்சி எடுத்த பலர் இங்கிருக்கின்றார்கள்.

ஒருவேளை முன்னாள் ஜனாதிபதி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இவர்களுக்கு என்ன நடக்குமென எம்மால் கூற முடியாது. அந்தளவிற்கு நாம் முன்னைய அரசாங்கத்திற்கு எதிராகப் போராடினோம்.

லசந்த விக்ரமதுங்க மற்றும் எக்னெலிகொட ஆகியோரை முன்னிறுத்தியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. நான் எந்தவொரு கட்சியையும் சார்ந்தவர் அல்லர். ஆகவே தைரியமாக எதனையும் கூற முடியும். எங்களுக்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கததிற்கு காணப்படுகின்றது. நாம் இல்லையென்றால் இந்த அரசாங்கம் இல்லை.

சிவில் சமூகத்தினர் இல்லாவிடின் பிரதமர் பதவியோ, ஜனாதிபதி பதவியோ அல்லது அமைச்சரவையோ இன்று இல்லை. 10 வருட ஏகாதிபத்திய ஆட்சி நடத்திய மஹிந்தவை தோற்கடிக்க முடியுமாயின் நாம் ஏற்படுத்திய ஆட்சியில் எக்னெலிகொடவின் மனைவி போன்றவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கவும் எங்களாலேயே முடியும்.- என்றும் தெரிவித்துள்ளார்.

# ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்!

## நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜன.27

தேசிய லொத்தர் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றில், ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே நிதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த அரசாங்க காலப்பகுதியில் தேசிய லொத்தர் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

வருமானத்தில் 52 சதவீதம் அதிர்ஷ்டலாப சீட்டில் வெற்றி பெறுபவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. கடந்த அரசாங்க காலப்பகுதியில் இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பணத்தை வழங்குவதில் காலதாமதம் நிலவியது.

கடந்த அரசாங்க காலப் பகுதியில் இந்த நிதி அரசியல்வாதிகளின் சொந்த நலனுக்காகவே பயன்படுத்தப் பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.



ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளின் 70 வருட நிறைவை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir



# அபிராமிப்பட்டருக்காக மனம் இரங்கிய ஆதிபராசக்தி!

இன்று தை அமாவாசை

உலகெங்கும் உறைந்து, நிறைந்து விளங்கும் எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகை உமையம்மை அடியார்க்கருளும் ஆனந்தவல்லியாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் இடம்தான் திருக்கடவூர் அபிராமி அம்பாள் ஆலயம். இது ஒரு சிறப்புமிக்க ஆலயமாகும்.

இந்த அருள்மிகு ஆலயத்திலேதான் ''பட்டர்'' என்று அழைக்கப்படுகின்ற அம்பாள் அடியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் அம்பிகையின் மேலே இடையறாத பக்தி பூண்டவர். இந்த ஆலயத்திலே திருத்தொண்டு செய்து வாழ்ந்து வந்த இந்தப் பட்டர் திருத்தொண்டுகள் யாவும் முடிவடைந்து ஓய்வு பெறும் நேரங்களில் கண்களை மூடி தியானத்திலே ஈடுபட்டிருப்பார்; அம்பாளை உபாஷிப்பார்.

அந்தவேளை இவரது செய்கையானது பார்ப்போருக்கு இவரைப் பைத்தியக்காரர் என்று நினைக்கத்தோன் றும். சிரித்துச் சிரித்து அம்பாளோடு உரையாடி மகிழ்வார். இதுதான் பக்திப் பரவசம்மிகுந்த பேரானந்த அன்புநிலை; இது எல்லோராலும் முடியாது.

இவ்வாறிருக்கும் நாளில் இன்றைய தை அமாவாசைப் புனித புண்ணிய நன்னாளிலே நாட்டை அரசாளும் சரபோஜி மன்னவன் திருக்கடவூர் அபிராமி அம்பாளை வழிபாடியற்றுவதற்காக ஆலயத்துக்கு வந்திருந்தார்.

அரசனைக் கண்ணுற்றதும் அங்கிருந்த அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். ஆனால் இந்த அடியவரோ அம்பிகையின் தியானத்திலேயே இருந்த வண்ணம் சிரித்து மகிழ்ந்து பக்திப் பரவச நிலை யிலே மூழ்கியிருந்தார். அந்தக் கோயிலுக்கு வந்த சரபோஜி மன்னன் இவரைப் பார்த்து, ''இன்று என்ன திதி?'' என்று



வினவினான். அதைக் கேட்ட பட்டரோ அம்பிகையின் பேரருட் பிரவாகத்திலே மூழ்கியிருந்து அம்பாளின் ஒளிமயமான பேரருட் பிரவாகத்திலே தம்மை மறந்து இருந்த நிலையிலே ''பௌர்ணமிதானே'' என்று கூறிவிட்டார்.

உடனே -

சரபோஜி மன்னவன், ''இவருக்குப் பித்துப் பிடித்து விட்டது போலும். சும்மா பிதற்றுகின்றாரே'' என உள்ளூர எண்ணிய வண்ணம், ''ஓய்! இன்று அமாவாசையல்லவா! பௌர்ணமி என்கிறீரே!'' என்று சினந்த வண்ணம் ''இவர் இதை நிரூபிக்காது விட்டால் கடுமையான அரச தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார். இது எனது ஆணை'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டான்.

இது முடிந்து நினைவு திரும்பி இவ்வுலகுக்கு வந்த பட்டர் விக்கித்துப் போய் திகைத்து நின்றார். ''அடடா! தவறிழைத்து விட்டேனே! அமாவசையைப் பௌர்ணமி என்றல்லவா சொல்லிவிட்டேன். இது ஒரு பெரிய குற்றம் அல்லவா! என் செய்தேன்! இது என்ன தடுமாற்றம்?'' என்று அச்சமடைந்தார். திருக்கடவூர் அபிராமி அம்பாள் ஆலய முன்றிலில் ஒரு பெரிய ஆழமான குழி வெட்டப்பட்டது. அதன் நடுவிலே 100 கயிறுகளால் பிணைக்கப்பட்ட ஓர் உறியும் கட்டப்பட்டது. கீழேயுள்ள குழியின் நடுவிலே விறகுகளைப் போட்டு நெருப்பும் மூட்டப்பட்டது.

அந்தத் தீயின் மேலுள்ள உறியிலே ஏறி அமர்ந்து இருந்து கொண்ட பட்டர் அடியார்-

''தாயே! ஆதிபராசக்தி அம்பிகையே! நீதான் இந்த இக்கட்டிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று முறையிட்ட வண்ணம் நூறு பாடல்களாலான அபிராமி அந்தாதியைப் பாடினார். எல்லோரும் இவரது செய்கையைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்தனர்; அதிசயித்து நின்றனர்.


ஒவ்வொருபாடலும் முடிய முடிய ஒவ்வொரு கயிறாக அறுக்கப்பட்டன. இவருடைய பக்தியின் மேன்மையை உலகத்தோர்க்கு உணர்த்தும் வகையில் 79 ஆவது பாடல் பாடிய போது தான் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

வானத்தில் அம்பிகை மேகமூட்டத்தின் நடுவில், நல்ல பேரருட் கருணை மிகுந்தவளாய் அலங்கார பூஜிதையாக ஆகாயத்திலே அருட் காட்சி கொடுத்தாள். அம்பிகை தன்னுடைய காதுத் தோடு ஒன்றைக் கழற்றி வானத்திலே வீசினாள்.

அப்போதுதான் அந்த அதிசய அற்புத ஆனந்த கோலாகலம் நிகழ்ந்தது. அம்பிகையின் காதுத்தோடு அந்த நேரத்திலே பூரண சந்திரனாகக் காட்சியளித்தது. தை அமாவாசை பட்டர் சொன்னபடி பூரணையாக மாறிவிட்டது. எல்லோரும் அதிசயித்து மெய்மறந்து நின்றனர்.

விஷயமறிந்த சரபோஜி மன்னவன் ஓடோடி வந்தான். பட்டரின் காலிலே வீழ்ந்து வணங்கி நமஸ்கரித்து ''பட்டரே! யான் தெரியாமல் பெரிய தவறு செய்துவிட்டேன்'' என்று தன்னை மன்னித்தருளும்படி வேண்டி நின்றான். பட்டரோ மெய்மறந்து அம்பிகையின் அருட்செயலை பார்த்து மெய்சிலிர்த்து நின்றார். அவர் பாடிய ''அபிராமி அந்தாதி'' 100 பாடல்களும் அற்புதமான ஆழ்ந்த கருத்துச் செறிவுள்ளவையாகும். அன்றுமுதல் அவருக்கு ''அபிராமிப்பட்டர்'' என்று பெயர் விளங்கலாயிற்று. ஆதலால் இன்றைய தை அமாவாசை நன்னாளிலே நாமும் அவரை மனமொழி மெய்களால் நமஸ்கரித்து வணங்கி நல்லருள் பெற்று உய்தியடைவோமாக.

''கலாபூஷணம்''
இராசையா ஸ்ரீதரன்



இந்தியக் குடியரசின் 68 ஆவது சுதந்திரதினம் நேற்று யாழ். இந்திய உதவித் தூதுவர் ஏ.நடராஜன் தலைமையில் யாழ். இந்திய தூதரகத்தில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக பாரதியாரின் பேரன் ராஜ்குமார் பாரதி வருகை தந்து உரையாற்றினார். அவருக்கு இந்தியத் தூதுவர் நடராஜன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். ராஜ்குமார் தமது உரையில் அன்பு, ஒற்றுமை, தன்னம்பிக்கை, வீரம், ஒருமைப்பாடு பற்றிப் பாரதியின் கவிநயத்துடன் கூறியமையுடன் மதம், கலாசாரப் பிரிவுகளைப் பிளவுபடுத்துவதில் இருந்தும் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். மதத் தலைவர்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-19)

## பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் நாளை கலாசார அமைச்சரால் திறந்து வைப்பு

வடமராட்சி, ஜன.27

பருத்தித்துறை பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட இணைப்புக் குழு உறுப்பினர்களின் அழைப்பின் பேரில், வருகை தரவுள்ள உள்நாட்டலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன கலாசார மத்திய நிலையத்தை வைபவ ரீதியாக நாடா வெட்டித் திறந்துவைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடக்கு மாகாண முதலமைச்சர், சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் பாலித தேவரப் பெருமவும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-30)

## விழிப்புணர்வு நாடகமும் பட்டிமன்றமும்

யாழ்ப்பாணம், ஜன.27

நாட்டில் தற்கொலையை இல்லாது ஒழிக்கும் நோக்குடன் கைகொடுக்கும் நண்பர்கள் என்னும் ஆற்றுப்படுத்தல் அமைப்பின் ஏற்பாட்டில் 'தற்கொலைக்குப் பொறுப்பு எமது சமூகமே' என்னும் தலைப்பிலான பட்டிமன்றமும், செம்முகம் கலைக் குழுவினரின் நாடகமும் நாளை சனிக்கிழமை காலை 9.45 மணிக்கு யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளன.

கைகொடுக்கும் நண்பர்களின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு...?

ஆங்கிலத்தில் - Wadeshepard
தமிழில் - நித்தியபாரதி

கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை இந்தியாவின் புதுடில்லியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவிடம் கையளிப்பதற்கான வரையறைகள் தொடர்பாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா விளக்கமளித்திருந்தார்.

உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திருகோணமலை துறைமுக அபிவிருத்தியை இந்தியாவிடம் கையளிப்பது தொடர்பாகப் பேச்சுகள் நடத்தப்படுகின்றன என்று தெரிவித்திருந்தார். ஆனால், பிரதமரின் இந்த அறிவித்தலை கடந்த வெள்ளியன்று இந்தியா மறுத்திருந்தது.

நீண்ட கால அடிப்படையில் நலன் பயக்காத இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இந்தியா ஆர்வம் காண்பிக்கவில்லை என்று இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய மாகடலின் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடத்தில் அமைந்துள்ள இலங்கை, தனது துறைமுகங்களைப் பொருளாதார வலுமிக்க நாடுகளிடம் கையளிக்கும் வழமை காணப்படுகிறது. திருகோணமலைத்துறைமுகத்தை இந்தியாவிடம் கையளிக்கும் அதேவேளையில், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 சதவீதத்தை 99 ஆண்டு காலக் குத்தகைக்கு சீனாவிடம் கையளிக்கத் திட்டமிட்டுள்ளமை இலங்கை தனது பூகோள அரசியலை சமவலுவுடன் பேணுவதற்கான நகர்வாகும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவிடம் கையளிக்க இலங்கை திட்டமிட்டாலும் கூட இது தொடர்பில் இந்தியா அதிருப்தியடைந்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவிடம் கையளிப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்ட நிலையில், இதற்கும் மேலாக அம்பாந்தோட்டையில் உள்ள 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சீனா 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான தொழில் பேட்டை ஒன்றை அமைப்பதற்கான பேச்சுகளை இலங்கை தற்போது மேற்கொண்டு வருகிறது.

கொழும்புத் துறைமு கத்துக்கு அருகில் 269 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் China Merchants Holdings என்னும் சீன நிறுவனத்தால் புதியதொரு நிதி நகரம் ஒன்று அமைக்கப்பட்டு வரு கிறது. இதில் 110 ஹெக்ரேயர் நிலப்பரப்பானது 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.

இதே சீன நிறுவனமே அம்பாந்தோட்டை துறை முகத்தையும் பொறுப் பேற்கவுள்ளது. இதற்கும் அப்பால், இலங்கையால் சீனாவிடமிருந்து 8 பில்லியன் கடன் பெறப்பட்டுள்ளது என்றும் இதனால் அதன் மீது இன்னும் அதிகம் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அயல் நாடுகளான இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையே பொதுவான வரலாற்று சார் உறவுகளைப் பகிர்ந்து வருகின்றன. அத்துடன் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் மிகவும் நெருக்கமான அரசியல் மற்றும் பொருளாதார உறவுகள் காணப்பட்டுள்ளன.

எனினும், அண்மைய ஆண்டுகளில் இந்த நெருக்கமான உறவு நிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இலங்கை, சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணி வருவதே இதற்கான காரணமாகும். தனது பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு விரிவடைவதை இந்தியா எதிர்த்து வருகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தில் பிரித்தானிய றோயல் கடற்படையின் தளமாகக் காணப்பட்ட திருகோணமலைத் துறைமுகம், தென்னாசியாவின் மிக ஆழமான இயற்கைத் துறைமுகமாகவும் கொழும்புத் துறைமுகத்தின் கொள்ளளவை விட பத்து மடங்கு அதிக நீர் மற்றும் நிலப் பரப்பையும் கொண்டுள்ள துறைமுகமாகவும் விளங்குகிறது.

இந்திய மாக்கடல் பிராந்திய நாடுகளான பங்களாதேஷ், மியான்மார், மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் சீனா தனது காலை அகலப் பதித்து வருகிறது.

சீனாவைப் பொறுத்தளவில் இலங்கையானது அதன் பரந்த அனைத்து லகக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு நாடாகக் காணப்படுகிறது.

இலங்கை, சீனா மற்றும் அதன் மத்திய கிழக்கு எண்ணெய் வளங்களை வழங்கும் நாடுகளுக்கு மத்தியில் கேந்திரமைய அமைவிடத்தில் அமைந்துள்ளது.

அத்துடன் சீனாவின் 21ஆம் நூற்றாண்டு கரையோரபட்டுப் பாதைத் திட்டத்தை நிறைவேற் றுவதற்கான முக்கிய நிதி, நிர் வாக மற்றும் கேந்திர மையமாகவும் இலங்கை அமைந்துள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தில் பிரித்தானிய றோயல் கடற்படையின் தளமாகக் காணப்பட்ட திருகோணமலைத்துறை முகம், தென்னாசியாவின் மிக ஆழமான இயற்கைத் துறைமுகமாகவும் கொழும்புத் துறை முகத்தின் கொள்ளளவை விட பத்து மடங்கு அதிக நீர் மற்றும் நிலப் பரப்பையும் கொண்டுள்ள துறைமுகமாகவும் விளங்குகிறது.

எனினும், திருகோணமலைத் துறைமுகமானது தற்போது மிகவும் குறைவான தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

அதாவது கோதுமை மா, சிமெந்து மற்றும் சில உள்ளூர் பொருள்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கான துறைமுகமாகவே தற்போது திருகோணமலைத் துறைமுகம் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இந்தப் பிராந்தியத்தின் மிகப் பெரிய ஆழ்கடல் இயற்கைத் துறைமுகமாகவும் 175 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மிகவும் ஆடம்பரமான சுற்றுலாத் துறை வலயம் ஒன்றையும் உருவாக்க வேண்டிய தேவை இலங்கைக்கு எழுந்துள்ளது.

இலங்கை கடன் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளமையும் திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தியைத் தனித்துத் தானாகவே செய்யக் கூடிய நிதி வளத்தை இலங்கை கொண்டிராமையும் இந்தத் திட்டத்தை அனைத்துலக முதலீட்டாளர்கள் முன்வந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பாக இந்தியா இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இலங்கை விரும்புகிறது.

திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்கு வழங்குவதன் மூலம் தனது நாட்டின் கரையோரத்தில் அதிகரித்துவரும் சீனாவின் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்குகள் தொடர்பாக இந்தியா விமர்சிக்காது என்று இலங்கை கருதுகிறது.

அத்துடன் சீனாவின் இந்தச் செல்வாக்கானது காலப் போக்கில் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப் படலாம் என்னும் இந்தியாவின் அச்சத்தைப் போக்குவதற்கு, தனது நாட்டில் எந்த நாடுகளும் முதலீடு செய்ய முன்வரலாம் எனவும் குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் அல்லது சீனா என்னும் பேதமின்றி எந்த நாடும் முதலீடு செய்யலாம் என்று இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையில் சீனாவால் மேற்கொள்ளப்படும் கொழும்பு நிதி நகரம், அம்பாந்தோட்டைத் துறைமுகம், அம்பாந்தோட்டை தொழில் பேட்டை போன்ற பெரிய பல திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்தியாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.


ஆகவே, இவ்வாறான திட்டங்களிலிருந்து இந்தியா ஒருபோதும் வெளிப்படையாகப் புறக்கணிக்கப்படவில்லை.

இலங்கையில் பெரியளவில் முதலீடுகளை மேற்கொள்வதில் இந்தியா ஆர்வமாக உள்ளது என்று காண்பித்துள்ள அதேவேளையில், இலங்கையின் கட்டுமான அபிவிருத்திக்காக இந்தியாவால் 2 பில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் இலங்கையில் பெரியளவில் முதலீடுகளை செய்ய இந்தியா ஆர்வம் காண்பிக்கவில்லை எனவும் இந்தியாவின் வர்த்தக, தொழில் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் சில மாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்தியா தனது உள் நாட்டில் பல்வேறு கட்டுமானத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. அதாவது இந்தியா தனது துறைமுகங்களை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான எந்தவிதமான திட்டத்தையும் இந்தியா முன்னுரிமைப்படுத்தவில்லை என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.★★★

(நன்றி: புதினப்பலகை)









பொன்.வேணு கிருஷ்ணா


### ஜனநாயகக் கட்சியின் போட்டி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனை விட சுமார் மூன்று மில்லியன் வாக்குகள் குறைவாகப் பெற்றமையை மறந்தேபோன ட்ரம்ப்


Final Popular Vote Total Shows Hillary Clinton Won Almost 3 Million More Ballots Than Donald Trump

It's by far the largest margin of victory in the popular vote for a candidate who did not win the election.




பதவியேற்புரைகளில் மரபாக இருக்கக் கூடிய ஜனநாயக வார்த்தையாடல்கள் எதுவும் ட்ரம்ப்பின் உரையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேர்தல் நடைமுறைக்கான எந்த பாராட்டு மொழிகளும் இல்லை, தனக்கு வாக்களிக்காத பத்து மில்லியன் கணக்கான மக்களுக்கு எந்த அழைப்பும் இல்லை, தன்னை எதிர்த்தவர்களுக்கு அவர்களின் உரிமைகள் மதிக்கப்படும் என்பதற்கான எந்த மறு உறுதியளிப்பும் இல்லை, ''அனைத்து மக்களின்'' ஜனாதிபதியாக இருப்பதற்கான எந்த உறுதிமொழியும் இல்லை. ஜனநாயகக் கட்சியின் போட்டி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனை விட சுமார் மூன்று மில்லியன் வாக்குகள் குறைவாகப் பெற்று, மொத்தத்தில் வெறும் 46 சத வீதம் வாக்குகள் மட்டுமே தான் பெற்றிருந்ததை ஒப்புக் கொள்ளும் ஒரு வசனமும் கூட அங்கு இல்லை. ( It is notable that Trump's speech discarded the democratic rhetoric that is traditional for inaugurations. There was no paying tribute to the electoral process, no appealing to the tens of millions who did not vote for him, no reassurance to those opposed to him that their rights will be respected, no pledging to be a president of "all the people." There was not even an acknowledgement that he had received under 46 percent of the vote, trailing his Democratic opponent Hillary Clinton by nearly three million votes.)






Source: US television stations

© AFP

### ட்ரம்ப் மக்கள் என்ற இடத்தில் தன்னையே நிறுத்திக் கொண்டிருந்தார்

அதற்கு நேர்மாறாக, அரசியல்வாதிகள் என்றும் ஸ்தாபகம் என்றும் அடையாளம் காட்டப்படுகிற நமது தேசத்தின் தலை நகரில் இருக்கக் கூடிய ஒரு சிறிய குழுவை, வேறு வார்த்தைகளில் சொன்னால், கேபிடல் கட்டடத்தின் மேற்கு முனையில் தன்னைச் சுற்றி அமர்ந்திருக்கக் கூடிய நாடாளுமன்றவாதிகள், செனட்டர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் உள்ளிட்ட ஒவ்வொருவரையும், அவர் கண்டனம் செய்தார். அவர்களிடம் இருந்து அதிகாரம் பறிக்கப்படும் ஏனென்றால் வொஷிங்டன் டிசியில் இருந்து அதிகாரத்தை நாங்கள் இடமாற்றம் செய்து மீண்டும் மக்களாகிய உங்களுக்கே அளிக்கிறோம் என்று அவர் அறிவித்தார், இங்கே ட்ரம்ப் மக்கள் என்ற இடத்தில் தன்னையே நிறுத்திக் கொண்டிருந்தார். ( On the contrary, Trump denounced "a small group in our nation's capital," identified as "politicians" and "the establishment," in other words, everyone seated around him on the western face of the Capitol building - congressmen, senators, former presidents. He declared that they would be deprived of all power because "we are transferring power from Washington, DC and giving it back to you, the people"—with Trump himself, of course, acting as the stand-in for "the people.")

### முதலாளித்துவத்தின் குற்றங்களுக்கும் தோல்விகளுக்கும் ஒரு போலியான எதிரியை பொறுப்பாகக் காட்டுகிறார் ட்ரம்ப்





இந்தப் பதவியேற்பு நிகழ்வில் இருந்து அரசியல்ரீதியாக ஒரேயொரு முக்கிய முடிவுக்கே வர முடியும்: ட்ரம்ப் ஓர் அமெரிக்க பாசிச இயக்கத்தை அபிவிருத்தி செய்ய முனைந்து கொண்டிருக்கிறார்; முதலாளித்துவத்தின் குற்றங்களுக்கும் தோல்விகளுக்கும் ஒரு போலியான எதிரியை பொறுப்பாகக் காட்டி விட்டு, தனது கொள்கைகளை எதிர்க்கின்ற எவரொருவரையும் துரோகிகளாக சித்திரித்து விட்டு, மக்கள் விருப்பத்தின் உருவடிவாகவும் நெருக்கடிக்கு ஒரு தீர்வை வழங்கக் கூடிய ஒரேயொரு மனிதராகவும் தன்னை முன்நிறுத்துவதற்கு முனைந்து கொண்டிருக்கிறார். ( There is only one politically serious conclusion that can be drawn from this inauguration: Trump is seeking to develop an American fascistic movement, offering a false enemy to be held responsible for the crimes and failures of capitalism, demonizing anyone opposed to his policies as disloyal, and presenting himself as the personification of the popular will and the only one who can deliver a solution to the crisis.)

### ட்ரம்ப் மந்திரிசபை




ட்ரம்ப் பில்லியனர்கள், வலது-சாரி சித்தாந்தவாதிகள் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதிகள் கொண்ட ஒரு மந்திரிசபையை ஒன்று கூட்டியிருக்கிறார். போர்; ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்கள் மற்றும் உழைக்கும் மக்களின் வேலைகள் மற்றும் வாழ்க்கைத் தரங்கள் அழிக்கப்படுதல் ஆகியவற்றைக் கொண்ட ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் எவரொருவர் கற்பனை செய்வதைக் காட்டிலும் அதிகமாக ட்ரம்ப் அதிகமாக முன்செல்ல இருக்கிறார். ( Trump has assembled a cabinet of billionaires, right-wing ideologues and former generals. The Trump administration will go much further than anyone imagines in pursuing a program of war, attacks on democratic rights and the destruction of jobs and living standards for working people.)

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



39

## பெங்களூர் பேச்சுக்கள்

1986 ஆம் ஆண்டு ஜூன் மாதக் கடைசியில், இந்திய அமைச்சர்களின் விஜயத்தை அடுத்து, இனப் பிரச்சினை பற்றி விவாதிக்கும் நோக்குடன் அரசியற் கட்சிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டினார் ஜெயவர்த்தனா. தமிழர் தரப்பில் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி இந்த மாநாட்டில் கலந்து கொண்டது. பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த மாநாட்டைப் பகிஷ்கரித்தது. இம்மாநாடு நான்கு மாதங்களாக நடைபெற்று தமிழ் மாகாணங்களுக்கு மிகக் குறைந்த அளவில் அதிகாரப் பரவலாக்கம் வழங்கும் ஒரு தீர்வுத்திட்டத்தை வகுத்ததுடன் முடிவுற்றது. வருமான அதிகாரங்கள் மறுக்கப்பட்ட, நிலவுரிமையற்ற, சட்ட ஒழுங்கு - நிர்வாக அதிகாரம் இல்லாத வெறும் கண் துடைப்பான தீர்வுத்திட்டமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் மையமான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, தமிழ் பேசும் மக்களுக்கு மொழி வாரியான ஒரு தனித்துவமான மாநிலம் உருவாக்கப்பட்டு, தமிழர் தாயகக் கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படைக் கோரிக்கையை மாநாட்டில் பங்குகொண்ட சகல சிங்கள அரசியற் கட்சிகளும் நிராகரித்தன. அனைத்துக்கட்சிகள் மாநாடு போன்றே அரசியற் கட்சிகள் மாநாடும் தோல்வியில் முடிந்தது.

போரும் சமாதானமும் என்ற இரு முனைத் தந்திரோபாய அணுகு முறையைக் கடைப்பிடித்தார் ஜெயவர்த்தனா. தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நேர்மையான முறையில் தான் முயற்சிப்பதாக இந்தியாவுக்கும் உலகிற்கும் ஏமாற்றுவித்தை காட்டுவதற்காக, மாறி மாறி அரசியற் கட்சிகளின் மாநாடுகளைக்கூட்டி இனப் பிரச்சினையை இழுத்தடித்து வந்தார். அதே சமயம், பாகிஸ்தானுடனும் இஸ்ரேலுடனும் ஒப்பந்தங்கள் செய்து, பெருந்தொகையான ஆயுத உதவிகளைப் பெற்று, சிங்கள இராணுவ இயந்திரத்தை வலுப்படுத்தி வந்தார். அத்துடன் இந்தியாவுக்கு மத்தியஸ்துவ பாத்திரத்தை வழங்கி, தமிழ் விடுதலை அமைப்புகளுக்கு இந்திய அரசுவழங்கி வந்தஅரசியல் ஆதரவையும் இராணுவ உதவிகளையும் நிறுத்துவதில் வெற்றியும் கண்டார். சமாதானப் பேச்சுகளில் தமிழ் அமைப்புக்கள் விட்டுக்கொடாத கடும் போக்கைக் கடைப்பிடிப்பதாகப் புதுடில்லியை நம்ப வைத்து ராஜீவ் ஆட்சிப் பீடத்துக்கும் தமிழர்களுக்கும் மத்தியில் ஒரு பெரும் பிளவையும் ஏற்படுத்தினார். பேச்சுக்களை சூத்திரக் கருவியாகப் பாவித்து, இந்திய அரசுக்கும் தமிழர்களுக்கும் மத்தியில், ஒருபுறம் முரண்பாட்டையும் பகைமையையும் வளர்த்துக் கொண்டு மறுபுறம் , தமிழரின் சுதந்திர இயக்கத்தை இராணுவ பலம் மூலம் நசுக்கி விடும் நோக்கத்துடன் சிங்கள ஆயுதப் படைகளை நவீனமயப்படுத்தி விரிவாக்கம் செய்தார். ஜெயவர்த்தனாவின் நயவஞ்சக அரசியலைப் புரிந்து கொள்ளத் தவறிய ராஜீவ் காந்தி, அந்தக் கிழட்டு நரியின் சூத்திரதாரப் பொறிக்குள் சிக்கிக் கொண்டார்.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17, 18 ஆம் நாள்களில் பெங்களூரில் 'சார்க்' உச்சிமாநாடு நடைபெறவிருந்தது. இந்த மாநாட்டில் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு ஜெயவர்த்தனா நிர்ப்பந்திக்கப்பட்டார். இதன்படி, கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரிக்கும் திட்டம் ஒன்றை அவர் தயாரித்தார். வடகிழக்கைத் தனி மாநிலமாகக் கொண்ட தமிழர் தாயகக் கோரிக்கைக்கு சாவுமணி அடிக்கும் நோக்குடன் இனத்துவ, மத வேறுபாட்டின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரிக்கும் இந்த நாசகாரத்திட்டத்தை ஜெயவர்த்தனாவின் ஆட்சிப் பீடம் மிகவும் சூழ்ச்சித்திறனுடன் தயாரித்திருந்தது. இத்திட்டத்தின்படி தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற மூன்று இனத்தவர்களுக்குமாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் எல்லைகள் மூன்று பிரதேசக் கூறுகளாக மாற்றி அமைக்கப்பட இருந்தன. இத்திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்கள் வாழும் பகுதிகள் கிழக்கில் இருந்து துண்டாடப்பட்டு ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படும். திருகோணமலை நகரமும், துறைமுகமும், திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர் வாழும் பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு சிங்கள மாநிலமாக மாற்றப்படும். இச்சிங்கள மாநிலம் சிங்கள அரசின் நிர்வாகத்தின் கீழ்ச் செயற்படும். மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளும், அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளும் (திருகோணமலை நகரம், துறைமுகம், சிங்கள குடியிருப்புக்கள் தவிர்ந்த பகுதிகள்) மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பகுதிகளும் இணைந்ததாக தமிழர் மாகாணம் உருவாக்கப்படும். மிக நுட்பமாகத் தயாரிக்கப்பட்ட இந்த வரையறைத் திட்டம் சிங்களவர்களுக்கே சாதமாக அமையப்பெற்றது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகமும், நகரமும் அடங்கியனவாகக் கிழக்கில் தமிழருக்காக ஒதுக்கப்பட்ட குறுகிய நிலப் பரப்பை வடக்கு மாநிலத்துடன் இணைத்து, தமிழரின் தாயகக் கோரிக்கையை நிறைவு செய்யலாம் எனவும் ஜெயவர்த்தனா சிந்தித்தார். மூன்று கூறுகளைக் கொண்ட தனது எல்லை வரையறைத் திட்டத்தின் விவரங்களை இந்தியத் தூதுவர் டிக்சிட்டுக்கு விளக்கிய ஜெயவர்த்தனா, கிழக்கு மாகாணத்தில் வதியும் முஸ்லிம்கள், சிங்களவரின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என இந்திய அமைச்சர்களான சிதம்பரமும் நட்வார் சிங்கும் ஆலோசனை கூறியதன் அடிப்படையிலேயே இப் புதிய யோசனைகள்' வகுக்கப்பட்டன என கூறினார். பெங்களூரில் நடைபெறப்போகும் 'சார்க்' உச்சி மாநாட்டின் போது இப் 'புதிய திட்டத்தை' இந்தியப் பிரதமர் ராஜீவிடம் கையளிக்கப் போவதாகவும் அவர் கூறினார். டிக்சிட்டுக்கு இத் திட்டம் திருப்தியை அளிக்கவில்லை. இது பற்றிய தனது கருத்தை ஜெயவர்த்தனாவிடம் தெரிவிக்கையில் ''வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து, அதனை ஒன்றுபட்ட தமிழ்த் தாயகமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற தமிழரின் கோரிக்கையை தட்டிக்கழித்து ஓரம் கட்டும் நோக்கத்துடன் இத்திட்டம் உருவாக்கப்பட்டதாகவே தமிழ் மக்களும் இந்திய அரசும் கருதக்கூடு மென நான் அவரிடம் வெளிப்படையாகவே கூறினேன். திட்டமிடப்பட்ட ஓர் ஏமாற்று நடவடிக்கையாகவே இந்த யோசனையை தமிழர் தரப்பு எண்ணலாம் என்றும் நான் அச்சம் தெரிவித்தேன்.'' - எனக் குறிப்பிட்டார்.



வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழ்த்தாயக் கோரிக்கையை ஜெயவர்த்தனாவும் அவரது மூத்த அமைச்சர்களும் வன்மையாக எதிர்த்தனர். கிழக்கு மாகாணத்தைக் கூறு போட்டு, தமிழ் மாநிலத்தின் பிரதேசத் தொடர்ச்சியையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்து, சிங்களக் குடியேற்றங்களால் தமிழரின் தாயக நிலத்தை கபளீகரம் செய்வதே சிங்கள அரசின் நோக்கமாகும். எனவே, கிழக்கு மாகாணத்தை மூன்று பிரதேசங்களாகக் கூறுபோடும் எல்லை வரையறுப்புத் திட்டத்தை தமிழர்கள் ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என டிக்சிட் சரியாக எடை போட்டார். ஆயினும் ஜெயவர்த்தனா தனது நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. தமிழரின் தாயகக் கோரிக்கைக்கு ஏற்ப தனது யோசனைத் திட்டத்தை மாற்றியமைக்கவும் அவர் மறுத்துவிட்டார். ஓர் இடைக்காலத் தீர்வாக இந்த எல்லை வரையறுப்புத் திட்டத்தை இந்தியாவிடம் சமர்ப்பிக்க முடிவெடுத்தார். ராஜீவ் ஆட்சிப்பீடம் ஜெயவர்த்தனாவின் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டதோடு, அதனை அடிப்படையாக வைத்து பெங்களூரில் 1986 ஆம் ஆண்டு நவம்பரில் பேச்சுக்களை நடத்தும்படி விடுதலைப் புலிகளை நிர்ப்பந்திக்கவும் தீர்மானித்தது.

திம்புப் பேச்சுக்கள் தோல்வியடைந்து நான் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டதிலிருந்து பெங்களூர் சார்க் உச்சிமாநாடு வரையான கால இடைவெளியில் தமிழரின் தேசியப் போராட்ட அரங்கில் பாரதூரமான நிகழ்வுகள் நடந்தேறின. எல்லாவற்றுக்கும் முக்கியமாக, தமிழ் விடுதலை அமைப்புகளின் ஒன்றுபட்ட கூட்டணியாகச் செயற்பட்ட ஈழத் தேசிய விடுதலை முன்னணி பிளவுபட்டுச் சீர்குலைந்தது. முன்னணியில் அங்கத்துவம் வகித்த முக்கிய இரு அமைப்புகளான விடுதலைப் புலிகளுக்கும், ரெலோ இயக்கத்துக்கும் மத்தியில் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல்-மே மாத காலப்பகுதியில் ஆயுதப் போர் வெடித்தது. ரெலோ தலைவர் சிறீ. சபாரெத்தினமும், பெருந்தொகையான அவரது போராளிகளும் இச்சண்டையில் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் பகை மூண்டது. தமிழீழத்தில் இயங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் விடுதலைப் புலிகளால் நிராயுதபாணிகளாக ஆக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளின் அழுத்தத்துக்குப் பணிந்த புளொட் அமைப்பு தமிழர் தாயகத்தில் தனது இராணுவ நடவடிக் கைகள் அனைத்தையும் நிறுத்திக் கொள்வதாக அறிவித்தது. ஈரோஸ் அமைப்பின் தலைவர் பாலகுமார் விடுதலைப் புலிகளின் தலைமை யுடன் நட்புறவைப் பேணி நல்லுறவை வளர்த்ததால் இரு அமைப்புகளுக்கும் மத்தியில் தொடர்ந்து நல்லெண்ணம் நிலவியது. ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ் அமைப்புக்களுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கி அவற்றை வெற்றிகரமாக நடத்தி முடித்தவர் தளபதி கிட்டு ஆவார். மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு, விடுதலைப் போராட்டத்துக்கே அவப் பெயரை ஏற்படுத்திய ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்கி, யாழ்ப் பாணச் சமூகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிறுவிய பெருமை தளபதி கிட்டுவையே சாரும். ஒருபுறம் மாற்று அமைப்புகளின் அட்டகாசத்தை அடக்கியதுடன், தொடர்ச்சியாக சிங்கள ஆயுதப் படைகள் மீது துணிகரத் தாக்குதல்களை நடத்தி, படையினரை முகாம்களுக்குள் முடங்க வைத்து, யாழ்ப் பாணத்தை விடுதலைப் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்து, மகத்தான வரலாற்றுச் சாதனையைப் படைத்ததும் தளபதி கிட்டு ஆவார். இத்தகைய திருப்பங்கள் காரணமாக 1986 ஆம் ஆண்டு நவம்பரில் சார்க் உச்சிமாநாடு கூடுவதற்கு முந்திய காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே ஈழத்தமிழரின் தேச சுதந்திரப் போராட்டத்தை நிர்ணயிக்கும் மிகப் பலம்பொருந்திய அரசியல் சக்தியாக விளங்கிற்று.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# 852 பியர் போத்தல்களுடன் 2 பேர் பண்டாரவளையில் கைது



பண்டாரவளை, ஜன.27

பண்டாரவளையிலிருந்து எல்ல நகருக்கு வான் ஒன்றில் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்படவிருந்த 852 பியர் போத்தல்களுடன், இரு சந்தேக நபர்களை பண்டாரவளை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்தே, மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, பியர்போத் தல்கள் அடங்கிய 21 பெட் டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி இருவரையும் நீதி மன்றில் முன்னிலைப்படுத்து வதற்கான நட வடிக்கையில், பொலிஸார் ஈடுபட்டு வருகின் றனர். (எ)

# நெல் ஆலை உரிமையாளர்களின் நடவடிக்கையை கண்டறியக் குழு

கொழும்பு, ஜன.27

தற்போது நெல் வழங்கப் பட்டு அதனைச் சந்தைக்கு விநியோகிக்காமல் இருக்கும் நெல் ஆலை உரிமையாளர்கள் தொடர்பில் தகுந்த நடவடிக் கைகள் மேற்கொள்வதற்காக அமைச்சரவை உபகுழு ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபை வசம் இருக்கும் கையிருப்பு நெல்லை லங்கா சதொச நிறு வனம், தனியார் நெல் ஆலை உரிமையாளர்களின் ஊடாக அரி சியாக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த உபகுழு அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி யின் வேண்டுகோளின்படி 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இந்தோனேசியா அரசின் மூலம் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சந்தையில் அரிசி விலை உயர்ந்து காணப்படின் இந்தோனேசியா, வியட்நாம் உட்பட மிகவும் அருகிலுள்ள நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து துரிதமாக சந்தைக்கு விநியோகிப்பதற் குத் தேவையான நடவடிக்கை களை மேற்கொள்வது தொடர் பிலும் அமைச்சரவையின் கவனம் செலுத்தப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.(எ)

## தினசரி ராசி பலன் 27.01.2017

துர்முகிவருஷம் 2017 ஆம் ஆண்டு தைத் திங்கள் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை அமாவாசை பி.இ. 5.37வரை. பின் பிரதமை. உத்தராடம் இரவு 9.49 வரை. பின் திருவோணம் சித்தயோகம் இரவு 9.49 வரை. பின் சுபயோகம். ராகுகாலம். பகல் 10.55 முதல் 12.23 வரை. சுபநேரம் காலை 6.36 முதல் 8.06 வரை. இன்று அமாவாசை விரதம். இன்று திவசம் செய்ய வேண்டிய திதி தை மாத அமாவாசை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. புதிய தொழில் முயற்சிகள் தடைப்படும். பிறர் விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழிலில் பிறரை நம்பி எவ் விஷயத்தையும் ஒப்படைத்தல் ஆகாது.

**ரிஷபம்:** இவ்வாரம் யோகமான பலன்கள் காணப்படுகின்றன. சிலருக்கு சொந்த வீட்டிற்கு குடிபோகும் யோகம் உண்டாகும். அலுவலகம் மூலம் பதவி உயர்வுகளும், நன்மைகளும் ஏற்படும். வெளியூர்ப்பயணங்கள் உண்டாகும்.

**மிதுனம்:** இன்று குழப்பமான நாள். அலுவலகத்தில் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆழாக நேரிடும். வேலைப் பளுகூடும். அலைச்சலும் மனச்சஞ்சலம் காரணமாக ஆரோக்கியக்குறை ஏற்படும். நண்பர்களுடன் பகை உண்டாகும்.

**கடகம்:** இன்று விருத்தியான நாள். வருமானம் அதிகரிக்கும். இவர்களின் முயற்சிகள் சிரமமில்லாமல் வெற்றியடையும். சிலருக்கு புதியவேலை அதிக வருமானத்துடன் கிடைக்கும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.

**சிம்மம்:** இன்று இன்பமான நாள். சகோதர உறவு பலப்படும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும்.

**கன்னி:** இன்று கவலையான நாள். ஆரோக்கியக்குறைவு உண்டாகும். செய்யும் செயல்களில் குறைபாடு ஏற்படும். பதவியை இழக்க நேரும். மாணவர்களின் உயர்கல்விக்கு தடைகள் உண்டாகும்.

**துலாம்:** இன்று சஞ்சலமான நாள். நாடு கடந்து வந்த தொழிலில் மந்த நிலை உருவாகும். குடும்பத்தில் குழப்பமான நிலை உருவாகும். வியாபாரிகள் எதிர்பார்க்கும் லாபமும் வருமானமு குறையும். உத்தியோகத்தர்கள் மேலிடத்தவர்களின் அதிருப்பதிக்கு ஆளாகநேரும்.

**விருச்சிகம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. ஆரோக்கியக்குறைவு உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் குறையும். செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**தனுசு:** இன்று மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். செய்யும் பணிகளால் முன்னேற்றமும், வெற்றியும் ஏற்படும். கலைஞர்களுக்கு புதியவாய்ப்புகள் வரும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

**மகரம்:** இன்று மகிழ்ச்சியான நாள். எதிர்பார்க்கும் வருமானம் தடையின்றி வந்து சேரும். நீண்டகால நோய்கள் குணமாகும். உத்தியோகத்தர்களுக்கு புதிய பதவிகளும், ஊதிய உயர்வும் கிடைக்கும்.

**கும்பம்:** இன்று யோசனையான நாள். தேவையற்ற மனக்கிலேசம் உண்டாகும். வேலை நிமித்தம் மனைவி, மக்களைப் பிரிந்து வாழும் நிலை ஏற்படும். வியாபாரம் தேக்க நிலையில் இருக்கும்.

**மீனம்:** இன்று புகழ் மிக்க நாள். தொழில் சிறப்பாக நடக்கும். அலுவலகத்தில் இவர்கள் திறமையால் உயர் அதிகாரிகளின் அரசு விருதையும், பரிசுகளையும் பெறுவார்கள்.

சந்திராட்டம நாள்: மிருகசீரிடம் 3, 4திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இத்தினம் கஷ்டங்களையும், அலைச்சலையும் கொடுக்கும்.

# இலங்கை-சீனா ராஜதந்திர உறவின் 60 ஆண்டுகள் நிறைவையொட்டி நிகழ்வு


கொழும்பு, ஜன.27

இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான இராஜ தந்திர உறவுகள் ஏற்படுத்தப் பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தி யடைந்துள்ளன.

இதனைமுன்னிட்டு நினைவு தினநிகழ்வு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதன்போது கலாசார வர்த் தகக் கண்காட்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இலவசமாகக் கண்காட்சியைப் பார் வையிட முடியும் .

இந்தக் கண்காட்சி பெப் ரவரி மாதம் 8 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கொழும்பு 7, சுதந்திர சதுக்கத்தில் அமைந் துள்ள ஆர்கேட் வளாகத்தில் மாலை 6.30-9.30 மணி வரை நடைபெறவுள்ளது. (எ)



யாழ்.கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலைக்கு வட மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் தவராசாவின் 2016 ஆம் ஆண் டுக்கான பிரமாண நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ-21)

## ஒன்றரை லட்சம் தென்னங்கன்றுகளை வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஜன.27

கடந்த வருட இறுதியில் விவசாயிகளுக்கு வழங்குவதற் குத் திட்டமிடப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தென் னங்கன்றுகளை அடுத்த மாதம் வழங்க உள்ளதாக தெங்கு அபிவிருத்திச் சபை தெரிவித் துள்ளது.

கடந்த மாதம் வறட்சி நிலை காணப்பட்டதால் தென்னங் கன்றுகளை விநியோகிக்க முடியவில்லை என்று அந்தச் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தில் உள்ள 28 தெங்குப் பயிர்ச் செய்கை நிலையங்களின் ஊடாக இவற்றை வழங்குவதற் கான நடவடிக்கைகளை தெங்கு அபிவிருத்திச்சபை மேற் கொண்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ)

## சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்ந்த 4 பேர் கைது

ஹற்றன், ஜன.27

பொகவந்தலாவ - கொட்டி யாகல தோட்டப்பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நால் வரைப் பொலிஸார் நேற்றுமுன் தினம் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 25 - 32 வயதுக்குட்பட்டவர் கள் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. இந்தநிலையில் கைது செய்யப்பட்ட நால்வரையும் ஹற்றன் நீதிவான் நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர். (எ)

# வத்தளையில் பொலித்தீன் தொழிற்சாலையில் தீ

கொழும்பு, ஜன.27

வத்தளை - ஹுணுபிடிய பகுதியில் பொலித்தின் தொழிற் சாலை ஒன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் தீயணைப்புப் படை யினர் மற்றும் பொலிஸார் இணைந்து தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந் துள்ளனர். இதேவேளை, தீ விபத்துக்கான காரணம் இது வரைத் தெரியவரவில்லை.

இந்தத் தீ விபத்துத் தொடர் பில் மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடபொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.(எ)

# யாழ்ப்பாண தமிழ்ச்சங்கம் நடத்தும் தாமோதரம்பிள்ளையின் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாண தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் சி.வை. தமோ தரம்பிள்ளை நினைவரங்கம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் பேரா சிரியர் மனோன்மணி சண்மு கதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் தமிழ்த் தெய்வ வணக்கத் தைத் தொடர்ந்து யாழ்ப்பாண தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் நா.பை.குமரிவேந் தனால் வர வேற்பு உரை ஆற் றப்படும்.

நிகழ்வில் வாழ்த்துரையை ஓய்வு நிலை வங்கி முகாமை யாளர் எஸ்.செந்தில்நாதனும், தொடக்கவுரையை வடமா காணக் கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரி முகுந்தனும் நிகழ்த்துவார்.

நினைவுப் பேருரையை சி.வை.'தாமோதரம்பிள்ளை பற்றிய பதிவுகள் - ஒரு மீள் நோக்கு' எனும் பொருளில் யாழ்.பல்கலைக்கழக முது நிலை விரிவுரையாளர் திருமதி செல்வாம்பிகை நந்தகுமார் நிகழ்த்துவார்.

நிகழ்வில் தெரிவுசெய்யப் பட்ட பாடசாலைகளுக்கு கரி கணன் அச்சு நிறுவனத்தால் ஒன்றரை அடி உயரம் உடைய மென் சிமெந்தாலான நாவலர் திருவுருவச் சிலைகள் வழங் கப்படவுள்ளன.

நன்றியுரையை யாழ்.பல் கலைக்கழக சட்டத்துறை மாணவன் ஸ்ரீ.ஸ்ரீஸ்கந்தஸ்ரீ நிகழ்த்துவார். (எ-21)

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம்

# மக்கள் போராட்டமாக மாறினால் சரியான ஒரு தீர்வு கிடைக்கும்!

## வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறும் பட்சத்தில் தான் ஒரு சரியான தீர்வு கிடைக்கும் என்று வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமற்போன பிள்ளைகளின் பெற்றோர்கள் இந்தப் போராட்டத்தில் கடந்த திங்கள் கிழமையில் இருந்து ஈடுபட்டு வருகின்றனர்.

உண்மையில் பிள்ளைகளைத் தொலைத்தவர்கள் மற்றும் இராணுவத்திடம் பிள்ளைகளை நேரடியாக ஒப்படைத்தவர்கள் படும் வேதனை சொல்லித் தெரிய வைக்க முடியாது. என்னுடைய சகோதரன் ஒருவரும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார். உண்மையில் இது ஒரு தர்மசங்கடமான நிலையாக இருக்கின்றது. இவர்கள் எங்கிருக்கிறார்கள்? இவர்களை யாரிடம் சென்று கேட்பது? இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்? இவ்வாறான கேள்விகளுக்கு மத்தியில் தான் போராட்டம் தொடர்கிறது.

காணாமல் போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை எங்களிடம் அரசு கேட்கிறது. அது தெரியாமல் தான் பிள்ளைகளைத் தொலைத்த பெற்றோர் யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் பிள்ளைகளை காணாது பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தப் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறும் பட்சத்தில் தான் இதற்கு ஒரு சரியான தீர்வு கிடைக்கும் என்று நான் நம்புகின்றேன். என்னைப் பொறுத்த மட்டில் குறிப்பாக எங்களுடைய தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வில்லை என்றுதான் நான் கருதுகின்றேன்.

எந்த இடத்திலும் ஒரு சாரார் ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் போது ஏனைய மக்கள் வேறு திசையில் செல்வதும் அல்லது அதற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதை நான் உணருகின்றேன். கட்சி பேதமின்றி எல்லோரும் ஒட்டு மொத்தமாக ஒன்றிணைந்து போராட வேண்டும்.

வடக்கு, கிழக்கு மட்டுமல்ல உலகம் முழுவதும் இருக்கும் எமது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும்.

இன்று ஒரு பிள்ளையை பெற்று வளர்த்து பறிகொடுக்கும் போது பெற்றோருக்கு இருக்கும் வேதனை மற்றவர்களுக்கு சில நேரங்களில் புரிவதில்லை.


ஆகவே தமிழ் மக்கள் என்ற ரீதியில் எல்லோரும் ஒன்றுபட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் நேரடியாக இராணுவம், புலனாய்வு துறையினரிடம் கையளிக்கப்பட்ட எமது பிள்ளைகள் வர வேண்டும் என்று கோரி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

அதேநேரம் பிள்ளைகளை



பறிகொடுத்த எமது பெற்றோர்கள் சில நாள்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல இடர்பாடுகளுக்கு மத்தியில் கொட்டும் மழையிலும் அவர்கள் கோரிக்கையை விடாது பிள்ளைகள் கிடைக்க வேண்டும் என்ற ஏக்கத்தோடு இருக்கின்றார்கள்.

இந்த நல்லாட்சி அரசு இந்த விடயத்தில் நடவடிக்கையை மேற்கொண்ள்ள வேண்டும்.- என்றார். (ஐ-100)



சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன.27

பாண்டியன்தாழ்வு ஸ்ரீநரசிம்மஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 17 ஆம் திகதி சிவஸ்ரீ.ச. இராஜசேகரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 108 சங்காபிஷேகம்இடம்பெற்று மாலை வைரவர் பெருமான் திருமஞ்சத்தில் வீதி வலம்வருவார். (ஐ)

* * *

தென்மராட்சி, ஜன.27

ஆபிராமி அன்னையின் கருணை விழாவும் அபிராமிப் பட்டரின் குரு பூசையும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் கொடிகாமம் தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளன.

விசேட நிகழ்வாக 100 கயிற்றில் ஊஞ்சல் கட்டி அபிராமிப் பட்டரை வழிபடும் நிகழ்வு இடம்பெற உள்ளது.

வழிபாட்டைத் தொடர்ந்து கலைஞானி கே.ரி.குமரநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கே.ரீ.கே.கலையகத் தலைவர் துரைசிங்கம் ராணி கலந்துகொண்டு அறநெறி மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவார். நாவற்குழி அறவெளி மன்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியை செல்வி தியாகராஜா தனிஸ்ஜா இந்த நிகழ் வில் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (ஐ)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சில இடங்களிலும் கிளிநொச்சி மற்றும் வவுனியாவிலும் மின்சாரத் தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் 6.30 வரையும் யாழ். பிரதேசத்தில் உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ளறோட்-

உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர் மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா வடக்கு ஆகிய இடங்களிலும்-

கிளிநொச்சிப் பிரதேசத்தில் நாச்சிக்குடாவிலும், வவுனியா பிரதேசத்தில் குருமன்காட்டிலும் மின்தடை ஏற்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித் துள்ளார். (இ)

## 'காகித கப்பல்கள்' நூல் வெளியீடு

தென்மராட்சி மிருசுவில் தமிழ்தாசன் எழுதிய ''காகித கப்பல்கள்'' எனும் நூல் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கவிஞர் த.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சினி நவரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவகர் அ.கிருபாகரன் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சி.முகுந்தன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி நீதிமன்றபதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை,சாவகச்சேரி லயன்ஸ் கழக செயலாளர் இ.கோகிலன், சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டு உரையை இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன் ஆற்றவுள்ளார்.நூலை முதன்மை விருந்தினர் ரஞ்சினி நவரட்ணம் வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை கிருபாலேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் பெற்றுக்கொள்வார். (இ-21)

# காணாமற்போனோருக்கு நீதி வேண்டி சகல தரப்புக்களும் களமிறங்கவேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்த்து நீதியைப்பெற சகலமட்டத்திலும் போராட்டங்கள் விரிவு படுத்தப்படவுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பலவந்தமாகக் கடத்தப்பட்டு காணாமற் போகச்செய்யப்பட்டவர்களை விடுவிக்கவும் பல வந்தமாகக் கடத்தப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் நாம் விரைந்து செயற்பட வேண்டியுள்ளது.

போர் நடைபெற்ற போதும் போரின் இறுதித் தருணங்களிலும் போருக்குப் பின்னரும் ஆயிரக் கணக்கில் எமது இளைஞர்களும் யுவதிகளும் கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டவர்கள் அரசின் ஆயுதப் படைகளால் கடத்தப்பட்டனர் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

கடத்தல்களின் பின்னணியில் அரசே இருந்தது என்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டு உள்ளன.

எனினும் அரசு இந்தப் பிரச்சினையில் பொறுப்புச்சொல்லத் தயார் நிலையில் இல்லை. ஆயினும் அரசு விரைந்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் கால அவகாசத்தையும் தமிழ்த் தரப்புக்கள் தொடர்ச்சியாக முன்வைத்தும் பயன் ஏற்படவில்லை.

ஆட்சி மாற்றத்தின் வாயிலாகவும் எமது மக்களின் வாக்குகளாலும் ஆட்சிபீடம் ஏறிய மைத்திரி - ரணில் அரசு கூட நீதியைத் தருவதற்குத் தயாரில்லை. மாறாக இந்த அரசு பிரச்சினையைத் தமிழ் மக்களிடத்தில் இருந்து தணித்து, சர்வதேசத்திடம் இருந்து தப்புவதற்கே முயற்சிக்கின்றது.

நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் இந்த அரசு, காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் தாய்மார்களின் கண்ணீருக்குக் கூட செவிசாய்க்க வில்லை.

இவ்வாறான நிலையில் எங்களுடைய உறவுகள் நீதிகோரி உண்ணாவிரத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்களது நிலைமை நாளுக்கு நாள் கவலைக்கிடமாகி வருகின்றது. இந்த நிலையில் வவுனியாவில் தாய்மார்கள் ஆரம்பித்துள்ள போராட்டத்துக்குச் சகல தரப்பினரும் எமது ஆதரவை வழங்க வேண்டும்.

இதுவரை அரசு காணாமற்போனோர் விடயத்தில் நீதியாகச் செயற்பட வில்லை. காணாமற் போனோரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல்வேறுபட்ட ஆணைக் குழுக்களை நியமித்தது. இந்த ஆணைக்குழுக்கள் ஏதும் நியாயமாகச் செயற்படவில்லை. ஆணைக் குழுக்களின் நியமனம், விசாரணை, அறிக்கை சமர்ப்பிப்பு என்று அனைத்துமே அரசு சர்வதேசத் திடமிருந்து தப்புவதற்கான உத்திகளாகவே உள்ளன. அவை, நீதிப் பொறி முறைகளுக்கான வையல்ல.

தற்போது காணாமற் போனோர் அலுவலகம் என்று சாக்குப்போக்கான ஒரு நாடகத்தை அரசு போடுகிறது. எதன் மீதும் நம்பிக்கைவைப்பதற்கான உண்மைத் தன்மையை




அரசு இல்லாமல் செய்து விட்டது.




தற்போது வவுனியாவில் உணவின்றி தம்மை உருக்கி போராடிக் கொண்டிருக்கும் தாய்மாருக்கு ஆதரவாகக் கருத்தியல் ரீதியிலும் செயற்பாட்டு ரீதியிலும் நாம் ஆதரவை வெளிப்படுத்த வேண்டும். அவர்களுடன் இணைய வேண்டும்.- என்றுள்ளது. (ஐ)

# டில்லியில் கோலாகலமாக நடைபெற்ற 68 ஆவது குடியரசு தின விழா

## கொடியேற்றினார் ஜனாதிபதி பிரணாப்; சிறப்பு விருந்தினராக அபுதாபி இளவரசர்





டில்லி, ஜன.27

இந்தியாவின் 68 ஆவது குடியரசு தின விழா நேற்று நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

**மழையால் தாமதம்**

டில்லியில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடைபெற்ற விழா நிகழ்வில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ராஜ்பாத்தில் தேசியக் கொடியேற்றினார். எனினும் மழை காரணமாக இந்த விழா தாமதமாக ஆரம்பமாகியது.

**சிறப்பு விருந்தினராக அபுதாபி இளவரசர்**

குதிரைப் படை வீரர்கள் அணிவகுக்க ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி விழா நடைபெறும் இடத்துக்கு அழைத்து வரப்பட்டார். அவரது காரில் சிறப்பு விருந்தினர் அபுதாபி இளவரசர் முகமது பின் ஜியாத்தும் வந்தார். விழா மேடைக்கு வந்த இருவரையும் முப்படைத் தளபதிகள், மற்றும் பிரதமர் மோடி ஆகியோர்வரவேற்னர். இதனையடுத்து ராஜ்பாத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தேசியக் கொடியேற்றி வைத்தார்.

அதைத் தொடர்ந்து பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் உயிரிழந்த அசாமைச் சேர்ந்த இராணுவ வீரர் ஹேங் பன்தாதாவுக்கு 'அசோக் சக்ரா' விருது வழங்கப்பட்டது. விருதை இராணுவ வீரரின் மனைவி பெற்றுக்கொண்டார்.

**முப்படை வீரர்களின் அணிவகுப்பு**

அதையடுத்து முப்படை வீரர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணி வகுப்பில் யு.ஏ.இ.,ன் 179 இராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர். படை அணி வகுப்பு மரியாதையை ஜனாதிபதி பிரணாப், அபுதாபி இளவரசர், பிரதமர் மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர் ஆகியோர் எழுந்து நின்று ஏற்றுகொண்டனர். அதைத் தொடர்ந்து முப்படைகளின் அணி வகுப்பு, ஆயுதங்கள் அணி வகுப்பு என்பன நடைபெற்றன.

இதேவேளை, குடியரசு தினக் கொண்டாட்டங்களை சீர்குலைக்கும் நோக்கில் லஷ்கர்- இ-தொய்பா பயங்கரவாத அமைப்பினர் தலை நகர் டில்லிக்குள் ஊடுருவி தாக்குதலில் ஈடுபடலாம் என்று மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்தது. இதனையடுத்து டில்லியில் உச்சகட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (எ)

## ஏறுதழுவுதல் போராட்டங்களில் கைதான 72 பேர் புழல்சிறையில்

சென்னை, ஜன.27

ஏறுதழுவுதலுக்கு ஆதரவாக இடம்பெற்ற போராட்டங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 72 பேர் எழும்பூர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நேற்றுமுன்தினம் இரவு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பலருக்குக் காயங்கள் காணப்பட்டன என்றும் அவர்களை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளர்.

ஏறுதழுவுதலுக்கு ஆதரவாக மெரினாக் கடற்கரையில் போராட்டம் நடத்திய மாணவர்களை கடந்த செவ்வாய்க் கிழமை பொலிஸார் வெளியேற்றியவேளை அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சென்னையில் மறியல் போராட்டம் இடம்பெற்றதும் மறியல் செய்த மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கவை. (எ)

## பனிச்சரிவில் இராணுவ வீரர் இருவர் மாயம்

ஜம்மு, ஜன.27

காஷ்மீரில் பனிச்சரிவில் சிக்கிய 2 இராணுவ வீரர்கள் மாயமாகியுள்ளனர். இவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் குரேஷ் பகுதியில் நிலச் சரிவு ஏற்பட்டது. இதில் இராணுவ முகாமும் சிக்கியது. இதில் 4 வீரர்கள் மீட்கப்பட்டனர். 2 வீரர்கள் மாயமானார்கள். ஏனவே அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. (எ)

## குடியரசு தின விழாவில் முதன்முறை தேசியக் கொடியேற்றினார் பன்னீர்



சென்னை, ஜன.27


இந்தியாவின் குடியரசுத் தின விழாவில் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற ஓ.பன்னீர் செல்வம் முதல் முறையாகத் நேற்று தேசியக் கொடியை ஏற்றினார்.

நாடு முழுவதும் 68ஆவது குடியரசு தின விழா நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

தமிழக அரசு சார்பில் சென்னைக் கடற்கரை வீதியில் குடியரசு தின விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாவையொட்டிச் சென்னை போர் நினைவுச் சின்னத்தில் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் மலர்வளையம் வைத்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து அவர் தேசியக் கொடியை ஏற்றினார்.

குடியரசு தின விழாக்களில் தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றி வைப்பதுதான் வழக்கம். தமிழகத்தின் பொறுப்பு ஆளுநரான வித்யாசாகர் ராவ், மகாராஷ்டிர மாநிலத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்றார். எனவே, தமிழகத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கொடி ஏற்றும் வகையில் இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


தொடர்ந்து, முப்படை சார்பில் குடியரசு நாள் அணி வகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அணிவகுப்பு மேடையில் இருந்தபடி அணி வகுப்பு மரியாதையை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஏற்றார். பின்னர் வீரதீரச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குப் பல்வேறு விருதுகளை அவர் வழங்கினார். விழாவில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின், துரைமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)




குடியரசு தினத்தை முன்னிட்டு மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக், ஒடிசா மாநிலம், பூரி கடற்கரையில் சிறப்பு மணல் சிற்பத்தை வடிவமைத்து நாட்டுப்பற்றை வெளிப்படுத்தி உள்ளார்.

# அமெ.-மெக்சிக்கோ இடையே எல்லைத் தடுப்பு சுவர்!

## ட்ரம்ப் அதிரடி உத்தரவு



வொஷிங்டன், ஜன.27

அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் கடக்க முடியாத எல்லைத்தடுப்புச் சுவர் ஒன்றை அமைப்பதற்கான நிறைவேற்று உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்துள்ளார்.

இந்த எல்லைத் தடுப்பு சுவருக்கான நிதியை, மெக்சிக்கோ மீள வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2000 மைல் நீளத்துக்கு அமைக்கப்படவுள்ள இந்தச் சுவருக்காகப் பல பில்லியன் டொலர்கள் தேவைக்கப்படுகின்றன.

இதற்கான நிதி ஒதுக்குவதற்கு காங்கிரஸ் சபை அங்கீகாரம் வழங்க வேண்டியது முக்கியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# தடுப்புச்சுவருக்கான நிதியை மெக்சிக்கோ செலுத்தாதாம்!

மெக்சிக்கோ, ஜன.27

அமெரிக்க - மெக்சிகோ எல்லையில் அமைக்கப்படவுள்ள தடுப்புச் சுவருக்கு தமது நாடு எந்தக் கொடுப்பனவுகளையும் செலுத்தாது என்று மெக்சிக்கோ அறிவித்துள்ளது.

மெக்சிக்கோ ஜனாதிபதி எரிக்பெனா நிட்டோ இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் கடக்க முடியாத தடுப்புச் சுவர் ஒன்றை அமைப்பதற்கான நிறைவேற்று உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்திருந்தார்.

இந்த எல்லைத் தடுப்பு சுவருக்கான நிதியை மெக்சிக்கோ மீள வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையிலேயே, மெக்சிக்கோ ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

2 ஆயிரம் மைல் நீளத்துக்கு அமைக்கப்படவுள்ள இந்தச் சுவருக்காக பல பில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்வரும் 31 ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைச் சந்திக்க, மெக்சிக்கோ ஜனாதிபதி வொஷிங்டன் செல்ல உள்ளார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதா அல்லது பிற்போடப்பட்டுள்ளதாக என்பது குறித்து எந்தப் புதிய தகவலையும் மெக்சிக்கோ வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

# 7 நாட்டவர்களுக்கு அமெரிக்காவுக்குள் பிரவேசிக்கத் தடை

வொஷிங்டன், ஜன.27

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் முகமாக 7 நாடுகளின் மக்களுக்கு அந்தநாட்டுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்க தீர்மானித்துள்ளார் என அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்தவகையில், ஈரான், ஈராக், சிரியா, லிபியா, யேமன், சூடான் மற்றும் சோமாலியா போன்ற நாடுகளின் மக்களுக்கு அமெரிக்காவுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்றக்காரர்களுக்கும் அந்தநாட்டுக்குள் பிரவேசிக்க முடியாதவாறு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இந்தத் தீர்மானம் ட்ரம்பின் தேர்தல் வாக்குறுதியாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)



டுபாயில் உள்ள உலகின் மிக உயர்ந்த கட்டடமான புர்ஜ் கலிபா இந்தியாவின் தேசியக் கொடியைப் போன்று வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் குடியரசு தினத்தை முன்னிட்டே இந்த அலங்கார விளக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று, இந்தக் கட்டடத்தை ஒட்டியதாக அமைந்துள்ள இசைக்கேற்ப நடனமாடும் நீர்த் தடாகத்தில் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் உருவான 'ஜெய் ஹோ' என்ற பாடலும் 'வந்தே மாதரம்' என்ற பாடலும் இசைக்கப்பட்டன.

# குவைத்தில் 7 பேருக்கு தூக்கு நிறைவேற்றம்

குவைத்தில், கொலை வழக்குக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட ஏழு பேருக்குத் தூக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவர்களில் மூன்று பேர் பெண்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களில் குவைத், எகிப்து மற்றும் எதியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர் என்று சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குவைத்தில் 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன் முறையாக நேற்று முன்தினம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அடுத்த மாதம் ட்ரம்பைச் சந்தித்து பேசவுள்ளார் இஸ்ரேல் பிரதமர்

ஜெருசலேம், ஜன.27

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அழைப்பை ஏற்ற இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகூ, அடுத்த மாதம் வெள்ளை மாளிகையில் ட்ரம்பைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

டொனால்ட் ட்ரம்பின் இந்த அழைப்பை ஏற்றுள்ள பெஞ்சமின் அடுத்த மாதம் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டு வெள்ளை மாளிகையில் ட்ரம்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் சில அறிவிப்புகளால் கடந்த 8 ஆண்டுகளாக இஸ்ரேல் - அமெரிக்கா உறவில் மந்த நிலை நீடித்து வந்தது.

தற்போது புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்றுள்ளதால் இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவு வலிமையானதாக மாறும் என்று இஸ்ரேல் அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. ட்ரம்ப் -நெதன்யாகூ சந்திப்பின்போது இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையிலான பிரச்சினை, மத்திய கிழக்கு நாடுகளில் பெருகி வரும் தீவிரவாதம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்துவார்கள் என்று இஸ்ரேல் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ)

# இஸ்ரேலின் நடவழக்கைக்கு ஐ.நா. கண்டனம் தெரிவிப்பு

பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட மேற்குக் கரையோரப் பகுதியில் குடியேற்றங்களை அமைக்கும் இஸ்ரேலிய அரசின் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள்சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய அரசு எதேச்சாதிகாரமான போக்கில் செயற்பட்டு வருவதாக அது குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, இஸ்ரேல் அரசு 25 ஆயிரம் வீடுகளை அமைக்க உள்ளதாகவும் இந்தக் குடியேற்றத் திட்டத்தில் யூதர்கள் குடியேற்றப்பட உள்ளனர் என்றும் அந்த நாட்டுப் பிரதமர் பென்ஜமின் நெத்தன்யாகூ தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இஸ்ரேல் சமாதான முயற்சிகளை உதாசீனம் செய்து வருவதாக பலஸ்தீனம் குற்றம் சுமத்தியுள்ளது. (எ)

# சீனாவில் ஒரு குழந்தை சட்டம் தளர்வு சடுதியாக அதிகரித்தது பிறப்பு வீதம்!

பீஜிங், ஜன.27

சீனாவில் நடைமுறையில் இருந்த 'ஒரு குழந்தை' சட்டம் தளர்த்தப்பட்டதை அடுத்துப் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது. இதன்படி, 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு சுமார் 13 இலட்சம் குழந்தை கள் மேலதிகமாகப் பிறந்துள் ளன என்று தெரியவந்துள்ளது.



சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 1979 ஆம் ஆண்டு முதல் 'குடும்பத்துக்கு ஒரு குழந்தை' என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தியது சீன அரசு. இதனால் பிறப்பு வீதம் குறைவடையத் தொடங்கியது.

எனினும், இந்தச் சட்டத்தால் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், மத்திய வயதுடையவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதனால், வேலைக்குச் செல்வோரின் எண்ணிக்கை குறைந்வடைந்துள்ளதுடன் முதியவர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான மனித வளமும் குறைந்துள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களே இருப்பதால் அவர்களுக்கு வேலைப்பளுவும், இதனால் மன அழுத்தமும், இவ்விரு காரணிகளால் உடல் நலப் பாதிப்புகளும் உருவாகியுள்ளன.

இதையடுத்து ஒரு தம்பதியர் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற புதிய சட்டம் 2014 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் 2016 ஆம் ஆண்டு சீனாவின் பிறப்பு வீதம் சுமார் 7.9 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன்படி கடந்த ஆண்டு மட்டும் 17 லட்சத்து 86 ஆயிரம் குழந்தைகள் சீனாவில் பிறந்துள்ளன.

எனினும், இந்தப் பிறப்பு வீதத்தால் தற்போது சீனா எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு கிடைக்காது என்றும், ஏறக்குறைய அடுத்த சுமார் 25 வருடங்களின் பின்னரே இந்தப் பிரச்சினை கட்டுக்குள் வரும் என்றும் சீன அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (எ)

## புனர்வாழ்வு பெற்ற மூவர் சமூகத்துடன் இணைப்பு





வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நில்யத்தில் ஒருவருட புனர்வாழ்வைப் பூர்த்தி செய்த மூவர் நேற்றுக் காலை சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கார்த்திகேசு நாதன் (முல்லைத்தீவு), குழந்தை வேல் தயாபரன் (கிளிநொச்சி), கணபதிப்பிள்ளை யோகராசா (மட்டக்களப்பு) ஆகியோரே சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் வவுனியா புனர்வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி, பூந்தோட்டம் புனர்வாழ்வு பணியகப் பணிப்பாளர், மின் இணைப்பு அதிகாரி, சமயத் தலைவர்கள், பூந்தோட்டம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகளின் உறவினர்கள் மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறிய 10 பேருக்கு சுயதொழிலுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(ஐ-100)

## கேப்பாபுலவில் 243 ஏக்கர் காணி முல்லை. அரச அதிபரிடம் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜன.27

முல்லைத்தீவு கேப்பாபுலவில் இராணுவத்தினர் வசமிருந்த 243 ஏக்கர் காணி முல்லைத்தீவு மாவட்டக் கட்டளைத் தளபதியால் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்களும் பயனாளிகளிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டன.

காணி அனுமதிப்பத்திரம் இதுவரை கிடைக்கப்பெறாத முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 350 பேருக்குச் சொந்தமான காணி அனுமதிப்பத்திரங்களும் இதன்போது மக்களுக்கு வழங்கப்பட்டன.

முன்னூறு பேருக்குத் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடமாகாண பிரதி அவைத்தலைவர் வா.கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், ஜனாதிபதியின் வன்னிக்கான இணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, முல்லைத்தீவு இராணுவ கட்டளைத் தளபதி, மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-81)



## இரண்டு பாடசாலைகளுக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள்





கிளிநொச்சி, ஜன.27

பரந்தன் கண்டாவளை மகா வித்தியால்யம் மற்றும் ஆனையிறவு தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளுக்கும் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனால் பாண்ட் வாத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலை அதிபர்களிடம் உபகரணங்கள் உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டன.

இந்தப் பாடசாலைகளுக்குக் கடந்த ஆண்டு வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் சென்றிருந்தபோது, பாடசாலைச் சமூகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய இவை வழங்கப்பட்டுள்ளன.

பிரமாணஅடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன் என்று தெரிவிக்கப்பட்டது.

உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், வடக்குச் சுகாதார அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ப.சீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ஐ-81)

## கிளிநொச்சியில் இன்று உணவு தவிர்ப்பு!

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வவுனியாவில் நடத்தப்படும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் இன்று காலை 9 மணியில் இருந்து மாலை 3 மணிவரை அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றிலில் நடத்தப்படவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் தலைவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்பினர், இளைஞர்கள் அனைவரையும் உரிமையுடன் கலந்துபோராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

(ஐ-70)

## இன்று முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம்

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நடத்தி வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

வவுனியாவில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் உறவுகளுக்கு வலுச் சேர்க்கும் முகமாகவே முல்லைதீவு மாவட்டத்திலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் இணைந்து இன்று காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

(ஐ-81)

## வித்தியானந்தா கல்லூரியில் தொழிநுட்ப கட்டடத் தொகுதி

### சித்தார்த்தன் எம்.பி. திறந்துவைத்தார்





முல்லைத்தீவு, ஜன.27

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் தொழிநுட்ப ஆய்வுகூட கட்டடத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

இந்தக்கட்டடம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஜனாதிபதி தமது முல்லைத்தீவு விஜயத்தை கால நிலை சீரின்மை காரணமாக இடைநடுவில் கைவிட்டமையால் அந்த நிகழ்வில் அவரால் பங்குபற்ற முடியவில்லை.

ஜனாதிபதியின்றியே நடைபெற்ற கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சி. சிவமோகன், வட மாகாண பிரதி அவைத் தலைவர் வா.கமலேஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், ஜனாதிபதியின் வன்னிக்கான இணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, முல்லைத்தீவு இராணுவக் கட்டளைத் தளபதி, மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-81)

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி: இறுதிச்சுற்றில் வில்லியம்ஸ் சகோதரிகள்!

மெல்போர்ன், ஜன.27

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் ஆகிய சகோதரிகள் இருவரும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர். மேலும், இறுதிச்சுற்றில் இவர்கள் இருவரும் எதிர்கொள்ளவுள்ளனர்.



ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற மகளிர் இரண்டாவது ஒற்றையர் அரையிறுதியில் செரீனா வில்லியம்ஸ், 6-2, 6-1 என்ற நேர் செட்களில் குரோசியாவைச் சேர்ந்த மிர்ஜனா லுசிக் பரோனியைத் தோற்கடித்து இறுதிச்சு றறுக்கு முன்னேறியுள்ளார். செரீனா, 8 ஆவது முறையாக ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

செரீனாவின் சகோதரியான 36 வயது வீனஸ் வில்லியம்ஸும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் முதல் ஒற்றையர் அரையிறுதியில் வீனஸ் வில்லியம்ஸ், 6-7(3) 6-2 6-3 என்ற செட் கணக்கில் சக நாட்டைச் சேர்ந்த கோகோ வான்டெ வெக்கைத் தோற்கடித்தார்.


14 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆஸ்திரேலியன் ஓபன் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு வீனஸ் வில்லியம்ஸ் தகுதி பெற்றுள்ளார்.

2009 விம்பிள்டன் போட்டிக்குப் பின்னர் வில்லியம்ஸ் சகோதரிகள் தற்போதுதான் ஒரு கிராண்ட்ஸ்லாம் போட்டியின் இறுதிச்சுற்றில் மோதவுள்ளனர்.

# பந்து தாக்கியதால் மூளையில் ரத்தக் கசிவு: ஆபத்தான நிலையில் ஆஸ்திரேலிய வீரர்!

மெல்போர்ன், ஜன.27

பிக் பாஷ் தொடரில் விளையாடிய ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜோ மென்னிக்கு தலையில் பலமாக பந்து தாக்கியதில் மூளையில் ரத்தகசிவு ஏற்பட்டுள்ளது.



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோ மென்னி (வயது 28), சமீபத்தில் இடம்பெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஹோபார்ட் டெஸ்டில் அறிமுகம் ஆனவர்.

தற்போது பிக் பாஷ் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரில் சிட்னி அணிக்காக விளையாடி வருகிறார்.

இத்தொடரின் அரையிறுதியில் பங்கேற்க வலை பயிற்சியில் ஈடுபட்ட இவர், மைக்கேல் லம்பிற்கு பந்து வீசினார் எனக் கூறப்படுகிறது. அப்போது எதிர்பாராத விதமாக பந்து மென்னியின் தலையில் பலமாகத் தாக்கியுள்ளது. இதில் சுருண்டு விழுந்த மென்னி உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு இவருக்கு தீவிர பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் பயப்படும் அளவுக்கு எதுவுமில்லை என்பதை உறுதி செய்த பின்னர் மென்னி மருத்துவ மனையில் இருந்து வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில் அந்த மருத்துவ சோதனை அறிக்கை நேற்று முன்தினம் வெளியானது. இதில், மென்னி தலைப்பகுதியில் எலும்பு பகுதியில் முறிவு ஏற்பட்டு, மூளைக்குள் ரத்தம் கசிவு இருப்பதும் தெரியவந்தது. இதனால், அவர் மீண்டும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

தற்போது முழு கண்காணிப்பில் உள்ள மென்னிக்கு இந்தக் காயத்துக்காக அறுவைசிகிச்சை எதுவும் தேவையில்லை என்பதால், விரைவில் அவர் குணமடைந்து திரும்புவார் என கிரிக்கெட் ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.




# உசைன் போல்ட்டின் பதக்கம் பறிப்பு; சக வீரரால் ஏற்பட்டது சிக்கல்!



கிங்ஸ்டன், ஜன.27

சக வீரர் ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கியதால், உசைன் போல்ட்டின் ஒரு தங்கப் பதக்கம் பறிக்கப் பட்டுள்ளது.

உலக தடகளத்தின் 'மின்னல்' மனிதன் என்று உசைன் போல்ட் (வயது 30) போற்றப்படுகிறார்.

இவர், கடந்த 2008 (பீஜிங்), 2012 (லண்டன்), 2016 (ரியோ) என தொடர்ந்து மூன்று ஒலிம்பிக்கில் 100, 200 மீற்றர் மற்றும் 4 X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் என அனைத்திலும் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். 'டிரிபிள் டிரிபிள்' சாதனை படைத்த இவர், மொத்தம் 9 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

அவரின் இந்தச் சாதனைக்குத் தற்போது சக வீரரால் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

2008 பீஜிங் ஒலிம்பிக்கில் அஞ்சல் ஓட்டத்தில், உசைன் போல்ட் டுடன் நெஸ்டா கார்டர், மைக்கேல் பிராட்டர், அசபா பாவெல் இணைந்து உலக சாதனையுடன் தங்கம் வென்றனர்.

இதில் நெஸ்டா கார்டர், (வயது 31) தடை செய்யப்பட்ட 'மெத்தில் எக்சாமின்' என்ற ஊக்கமருந்து பயன்படுத்தினார் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

இதனால், இப்போட்டியில் ஜமைக்கா வென்ற தங்கம் பறிக்கப்பட்டுள்ளது. எனவே, இரண்டாவதாக வந்த டிரினிடாட் அண்டு டுபாகோ அணிக்கு தங்கம் கிடைக்கும். ஜப்பானுக்கு வெள்ளியும், பிரேசிலுக்கு வெண்கலமும் வழங்கப் படவுள்ளன.

இந்தப் பிரச்சினையால் உசைன் போல்ட், ஒலிம்பிக்கில் வென்ற 9 தங்கம் 8 ஆக குறைந்துள்ளது.

மேலும், லண்டன் ஒலிம்பிக் (2012), உலக சம்பியன் ஷிப் (2011, 2013, 2015) ஆகிய போட்டிகளிலும் ஜமைக்கா அணியில் நெஸ்டா பங்கேற்றிருந்தார்.

இதனால், இந்தப் போட்டிகளிலும் ஒருவேளை இவர் ஊக்கமருந்து பயன்படுத்தியிருந்தால், உசைன் போல்டுக்கும் மேலும் சிக்கல்கள் வரலாம்.

இதேவேளை, பீஜிங் ஒலிம்பிக்கில் விளையாட்டு நட்சத்திரங்களிடம் இருந்து மொத்தம் 4,500 சோதனை மாதிரிகள் பெறப்பட்டன.

இதில் 9 பேர் மட்டுமே பிடிபட்டனர். தற்போதுள்ள நவீன சோதனை முறைகளைப் பயன்படுத்தி சந்தேகத்துக்குரிய 454 'சம்பிள்கள்' சோதிக்கப் பட்டு, சிக்குபவர்களின் பதக்கம் பறிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தான், நெஸ்டா ஊக்க மருந்தை பயன்படுத்தினார் என்பது உறுதியாகியுள்ளது.

# சாதனை நாயகன் சீக்குகே பிரசன்ன!



கொழும்பு, ஜன.27

இலங்கை அணியின் வீரர் சீக்குகே பிரசன்ன நேற்று முன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்காவிற்கு எதிரான இருபதுக்கு 20 போட்டியில் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

அவர் 16 பந்துகளில், 3 ஆறு ஓட்டங்கள் , 3 நான்கு ஓட்டங்கள் விளாசியிருந்தார்.

சீக்குகே பிரசன்ன இருபதுக்கு இருபது போட்டிகளில் பந்தை அடிக்கும் வேகமானது உலகிலேயே இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. அவர் பந்தினை அடிக்கும் வேகமானது 166.83 என தெரிவிக்கப் படுகின்றது.

அத்தோடு பந்தினை அடிக்கும் வேகத்தினை அடிப்படையாகக் கொண்டு முதலிடத்தினை நியூசிலாந்து வீரர் கொலின் க்ரேன்ட்ஹோம் கைப்பற்றியுள்ளார். அவரது வேகம் 170.74 ஆகும்.

# மீண்டெழுந்தது இலங்கை அணி!

## சாதனையை நிகழ்த்தி தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபதுக்கு 20 தொடரை வென்று!




கேப்டவுன், ஜன.27

தென்னாபிரிக்காவுக்கும் இலங்கை அணிக்குமிடையிலான மூன்றாவது இருபதுக்கு 20 போட்டியில் ஒரு பந்து மீதமிருக்க இலங்கை அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி யீட்டியுள்ளது.

கேப்டவுன் நியூ லேண்டில் நடைபெற்ற இந்த போட்டியில் தென்னாபிரிக்க அணியில் மூன்று மாற்றங்களும், இலங்கை அணியில் ஒரு மாற்றமும் செய்யப்பட்டிருந்தன.

தென்னாபிரிக்கா சார்பாக ஹீனோ குன்னுக்கு பதிலாக ரீசா ஹன்றிக்ஸ் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கினார்.

அதேநேரம் ஆறு மாதங்களுக்கு பின்னர் சர்வதேச போட்டிகளில் பிரசன்னமாகும் ஏ.பிடி.வில்லியசுக்காக துனிஸ் டி புரின் அணியிலிருந்து வெளியேறினார்.

அத்துடன், அறிமுக வேகப்பந்து வீச்சாளரான டேன் பீடர்சன், ஆரோன் ஃஹன்கிசோவுக்கு பதிலாக அணியில் உள்ளவாங்கப்பட்டிருந்தார்.

இலங்கை அணிக்காக கடந்த இருபதுக்கு 20 போட்டியில் காயமுற்ற அணித் தலைவர் அஞ்செலோ மத்தியூஸுக்காக ஆரம்ப துடுப்பாட்ட வீரராக உபுல் தரங்க களமிறங்கினார்.

மேலும், எதிர்வரும் ஒரு நாள் போட்டிகளுக்கு உபுல் தரங்க தலைமை தாங்கவுள்ள நிலையில் இந்த போட்டியில் தினேஷ் சந்திமல் அணியை வழி நடாத்தினார்.

அத்துடன், கடந்த போட்டியில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்திய லக்ஷன் சண்டகன் அணிக்கான தனது இடத்தை தக்க வைத்துக்கொண்டதோடு சுரங்க லக்மாலுக்கும் தொடர்ந்தும் ஓய்வளிக்கப்பட்டது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய அவ்வணியின் முதல் விக்கெட் 36 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் வீழ்த்தப்பட்டது.

பின்னர் மூன்றாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய டி வில்லியர்ஸ் 3 சிக்சர்கள் மற்றும் இரண்டு பவுண்டரிகள் உள்ளடங்கலாக 44 பந்துகளுக்கு முகம்கொடுத்து 63 ஓட்டங்களுடம் தனது மீள்வருகையை சிறப்பான முறையில் ஆரம்பித்தார்.

அவரது இந்த பங்களிப்புடன் தென்னாபிரிக்க அணி தமது இன்னிங்ஸுக்காக 5 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் இலங்கை அணியின் குலசேகர, சண்டகன் மற்றும் சீக்குகே பிரசன்ன ஆகியோர் ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தினர்.

பின்னர் 170 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இலங்கை அணி சார்பில் நிரோஷன் டிக்க வெல்ல மற்றும் உபுல் தரங்க ஆகியோர் களமிறங்கினர்.

முதல் விக்கெட்டுக்காக நான்கு ஓவர்களுக்கு 36 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் வைன் பார்னெல்லின் பந்து வீச்சில் உபுல் தரங்க 20 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அதனை தொடர்ந்து களமிறங்கிய தினேஷ் சந்திமல் மீண்டும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். ஆனால், மூன்றாவது விக்கெட்டுக்காக நிரோஷன் டிக்வெல்லவுடன் இணைந்து 71 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று, அணியின் வெற்றிப் பாதைக்கான அடித்தளத்தை இட்டார்.

வைன் பார்னெல் பந்து வீசிய ஆறாவது ஓவரில், தொடர்ச்சியாக மூன்று பிடியெடுப்புகள் தென்னாபிரிக்க களத்தடுப்பு வீரர்களால் கைநழுவவிடப்பட்டன.

அத்துடன் இந்த போட்டியில் மொத்தமாக 6 க்கும் மேற்பட்ட பிடியெடுப்புகளை நழுவ விட்டு தென்னாபிரிக்க அணி, மிக மோசமான களத்தடுப்பில் ஈடுபட்டது.

எனினும், 16 ஆவது ஓவரில் பந்து வீசிய இம்ரான் தாஹிர், இரு விக்கெட்டுகளை வீழ்த்தி இலங்கை அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தினர். இறுதி நான்கு ஓவர்களுக்குள் வெற்றி பெற 52 ஓட்டங்களை பெற வேண்டிய கடினமான நிலை இலங்கைக்கு இருந்தது.

17ஆவது ஓவரில் பந்து வீசிய வைன் பார்னெலை துவம்சம் செய்த சீக்குகே பிரசன்ன, அந்த ஓவரில் 2 பவுண்டரிகள் மற்றும் 1 சிக்சர் உள்ளடங்கலாக 19 ஓட்டங்களை விளாசி வெற்றி வாய்ப்பை அதிகரித்தார். இறுதியில், 3 ஓவர்களுக்கு 33 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் டேன் பீடர்சனின் ஓவரில் குசல் மெடிஸ் ரன் அவுட் ஆனார். அதே நேரம் அந்த ஓவரில் 7 ஓட்டங்கள் மட்டுமே பெற்றுக்கொள் எப்பட்டடே.

எனினும், சீக்குகே மற்றும் அசேல குணரத்ன இருவரும் இணைந்து 19 ஆவது ஓவரில் 15 ஓட்டங்களை விளாசியதால், இறுதி ஓவரில் 11 ஓட்டங்களை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இறுதி ஓவரை வீசிய அறிமுக பந்து வீச்சாளர் பீடர்சனின் முதல் பந்து அசேல குணரட்னவினால் பவுண்டரிக்கு விரட்டப்பட்டது. தொடர்ந்து, இரண்டு ஒற்றை ஓட்டங்களும் அதன் பின்னர் மீண்டும் பவுண்டரியும் பெறப்பட்டு போட்டி சமநிலையுற்றது.

இதன்போது, வெற்றி பெற்றதாக நினைத்து அசேல விக்கெட் கம்பத்தை கையில் எடுத்தார். இதனால், சற்று குழப்ப நிலை ஏற்பட்டது. எனினும், மீண்டும் துடுப்பாடிய அசேல எஞ்சிய ஓட்டத்தையும் அடுத்த பந்தில் பெற, இலங்கை அணி வெற்றி பெற்றது.

சிறப்பாக துடுப்பாடிய நிரோஷன் டிக்வெல்ல தனது இருபதுக்கு 20 கிரிக்கெட் வாழ்க்கையில் கூடிய ஓட்டங்கலாக 68 ஓட்டங்களை பதிவு செய்த அதே வேளை, இறுதி ஓவர்களில் தனது அதிரடியால் அணியை வெற்றிக்கு வழி நடாத்திய சீக்குகே பிரசன்ன ஆட்டமிழக்காமல் 16 பந்துகளுக்கு 37 ஓட்டங்களை விளாசினார்.

அத்துடன், அணித் தலைவர் அஞ்செலோ மத்தியூஸ் இல்லாத நெருக்கடியான நிலையிலும் இந்த போட்டியில் வெகு சிறப்பாக செயல்பட்டு இலங்கை அணி வரலாற்றில் கூடிய வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 169 ஓட்டங்களை வெற்றிகரமாகக் கடந்து சாதனை படைத்தது.

எனவே, இத்தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டுள்ளது.

இதன்மூலம் தொடர் தோல்விகளால் துவண்டிருந்த இலங்கை அணி, மீண்டெழுந்து விட்டோம் என்பதை நிரூபித்துள்ளது.

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மேலாடையை தூக்கியதால் சர்ச்சையில் சிக்கினார் தென்னாபிரிக்க வீரர் தாஹீர்!

கேப்டவுன், ஜன.27

தென்னாபிரிக்க அணியின் சுழற்பந்துவீச்சாளர் இம்ரான் தாஹிரை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) எச்சரித்துள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு-20 போட்டியின் போது அவர் அணிந்திருந்த அணியின் சீருடைக்குள் தனிப்பட்ட நபரொருவரின் படம் பொறிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தான் அணிந்திருந்த சீருடைக்குள் இருந்த புகைப் படத்தை போட்டியின் போது, மேலாடையை துக்கி வெளிக்காட்டியதால் தாஹீரை ஐ.சி.சி எச்சரித்துள்ளது. இம்ரான் தாஹீர் தனது அணி மேலாடைக்குள் பாகிஸ்தானை சேர்ந்த கலைஞர் ஜுனைட் ஜேம்சாட் என்பவரின் புகைப்படம் பொறிக்கப்பட்ட உள்ளாடையினை அணிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.








# வவுனியாவில் இ.போ.ச. - தனியார் பேருந்துகள் புதிய நடைமுறையில் போக்குவரத்துச் சேவை

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் அறிவிப்பு

வவுனியா இலங்கை போக்குவரத்துச் சபையினரையும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரையும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்று முன்தினம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் சேவையாற்றும் அரச மற்றும் தனியார் பேருந்துகளுக்கிடையில் இடம்பெற்ற முறுகல் நிலையால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பாக அந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் டெனீஸ்வரன் –

வவுனியாவில் போக்குவரத்து தொடர்பாக இருக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு பெற்று மக்களின் போக்குவரத்தை சீர் செய்யும் நோக்கோடு கலந்துரையாடல் நடத்தப்பட்டிருக்கிறது.

புதிய பேருந்து நிலையத்தினுள் இலங்கை போக்குவரத்துச் சபையினர் வர மறுத்த காரணத்தாலேயே இரு தரப்பினருக்கும் இடையே ஆரம்பத்தில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அதைக் கருத்தில் கொண்டு இனிமேல் புதிய நடைமுகைள் பின்பற்றப்படவுள்ளன. இதன்படி சகல உள்ளூர் சேவைகளில் ஈடுபடும் பேருந்துகளும் வவுனியா நகரத்தின் மையத்தில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் இருந்து தமது சேவைகளை ஆரம்பித்து புதிய பேருந்து நிலையத்திற்கு சென்று அங்குள்ள பயணிகளையும் ஏற்றிக்கொண்டு கிராமத்தை நோக்கிச் செல்லவேண்டும்.


அதேபோல வவுனியா மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் அனைத்தும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தமது சேவையை ஆரம்பித்து பழைய பேருந்து நிலையத்திற்கு வந்து மீண்டும் அங்குள்ள பயணிகளையும் ஏற்றிக்கொண்டு தமது சேவையை நடத்துவார்கள்.

ஏனைய மாகாணங்களில் இருந்து வரும் சகல தூரசேவை பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்தின் நுழைவாயில் வழியாக உள்சென்று தரித்துநிற்காமல் பயணிகளை இறக்கி பின் தமது பயணத்தைத் தொடருவார்கள் என்று தெரிவித்தார்.

26 ஆம் திகதி முதல் இந்த நடைமுறையின் அடிப்படையில் சேவைகள் நடைபெறும். நேரக் கணிப்பாளர்கள் ஒழுங்குகளை கவனித்துக்கொள்ளுவார்கள். இதன்மூலம் மக்களது போக்குவரத்தும் சீரானதாக அமையும். – என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விசேட கலந்துரையாடலுக்கு வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், வவுனியா மாவட்ட அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், பிரதி பொலிஸ்மா அதிபர், இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளர், வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றியத்தின் தலைவர், வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகம் மற்றும் வவுனியா வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-100)

# 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் கவிழ்ந்துபோன பவுஸர்



ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் டீசல் பவுஸர் ஒன்று நேற்று மதியம் விபத்துக்குள்ளாகி யுள்ளது.

கொழும்பு கொலன்னாவை பகுதியிலிருந்து கொட்டகலையிலுள்ள பெற்றோலியக் களஞ்சியசாலைக்கு டீசலைக் கொண்டுசென்ற டீசல் பவுஸர் ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் மல்லியப்பு சந்திக்கு அருகில் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது.

இதன்போது பவுஸரில் இருந்த டீசல் வெளியேறி வீதியில் பரவியுள்ளது. இந்த பவுஸரில் 33 ஆயிரம் லீற்றர் டீசல் இருந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து காரணமாக ஹற்றன் –கொழும்பு பிரதான வீதியூடான போக்குவரத்துக்கு சில மணி நேரம் இடையூறு ஏற்பட்டது எனவும் கூறப்படுகின்றது. (ஒ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்துச்செய் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

இவர்களின் உண்ணாவிரதத்திற்கு பல தரப்பினரும் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக சமூக வலைத்தளங்கள் ஆதரவுக் கருத்துக்கள் பரப்பப்பட்டன. அந்தவலைத்தளங்கள் ஊடாக இளைஞர், யுவதிகள் ஒன்றுதிரட்டப்பட்டு ஆதரவுப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களில் கவனயீர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றன. தொடர்ந்து மேலும் பல இடங்களில் போராட்டங்கள், கடையடைப்புக்கள் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

நேற்று நான்காவது நாளாக உண்ணாவிரதம் தொடர்ததால் உண்ணாவிரதிகளில் பலர் சோர்வடைந்தனர். அவர்களின் உடல்நிலை தொடர்பாக வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்தனர். மயங்கிய நிலையில் பெண்ணொருவர் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில், நேற்று மாலை 5.30 மணிக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன உண்ணாவிரதம் நடைபெற்ற இடத்திற்கு நேரடியாகச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார். காணாமற்போனோரின் விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கொழும்பில் உயர்மட்டச் சந்திப்பு ஒன்றைத் தாம் ஏற்படுத்தி தருவார் எனவும் போராட்டத்தைக் கைவிடுங்கள் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதன்படி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் அலரி மாளிகையில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், நீதி அமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினருடன் கலந்துரையாடல் ஏற்பாடு செய்வார் எனவும், அதில் தானும் கலந்துகொள்வார் எனவும் அவர் எழுத்துமூல உறுதிமொழியை வழங்கினார்.

இதனால் உண்ணாவிரதத்தை கைவிடுவதற்கு காணாமற்போனோரின் உறவினர்கள் இணக்கம் தெரிவித்தனர். இதையடுத்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குளிர்பானங்களை வழங்கி உண்ணாவிரதத்தை முடித்துவைத்தார். (ம-100)

# காரைநகர் பிரதேச முன்பள்ளிகளுக்கு பெறுமதியான பொருள்கள் வழங்கல்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலாவின் ஏற்பாட்டில்



காரைநகர், ஜன.27

காரைநகரிலுள்ள 14 முன்பள்ளிகளுக்கு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் சிபார்சின் அடிப்படையில், மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பெறுமதிமிக்க பொருட்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு முன்பள்ளிகளுக்கும் தலா 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட லப்டொப், புறொஜக்ரர், பில்ரர், தொலைக்காட்சிப் பெட்டி, முதலுதவிப்பெட்டி, பிளாஸ்ரிக் கூடைகள், 500 லீற்றர் நீர்த் தாங்கி, அலுமாரிகள் மற்றும் மாணவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

காரைநகர் பிரதேச செயலகத்தில் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பொருட்களை முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியைகள், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ம)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அமைச்சர் மங்கள சமரவீரவை வரவேற்கிறோம். அவர் எப்போதும் வசதியற்றவர்களுக்கு நண்பர் என அறியப்பட்டவர். அவர் தமது அமைச்சின் அலுவலக விடயங்களை எமது மக்களுக்கு மிக அருகில் கொண்டு வருகின்றவர். அவர் இனப் பிரச்சினை என்ற சிக்கலுக்கான தீர்வை எட்டுவதற்குத் தம்மால் இயன்ற எல்லை வரை சென்று பணியாற்றுபவர் என்பது எங்களுக்கும் தெரியும்.

அவரது ஈடுபாடு அல்லது பங்களிப்பு, நட்புறவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தக் கூடியதான ஒரு விவகாரம் உள்ளது. சில தனிப்பட்ட அக்கறை கொண்ட தரப்புகளால் புலம்பெயர்ந்த தனியாட்களும், நிறுவனங்களும் தடைசெய்யப்பட்ட விடயத்தில் அவற்றில் தெரிவு செய்யப்பட்ட சில நிறுவனங்கள், தனியாட்கள் மீதான தடையை நீங்கள் விலக்கினீர்கள் என்பதை நான் காண்கிறேன். இந்த விடயத்தில் சுதந்திரமான, உத்தியோகபூர்வமான, பிரத்தியேக விசாரணை ஒன்று இடம்பெற்றிருக்குமாயின் அது சிறப்பாக இருந்திருக்கும். சில தனி நபர்களும், நிறுவனங்களும் இன்னமும் அந்தத் தடைப்பட்டியலில் இருந்து நீக்கப்படாமைக்கு அவர்கள் அரசியல் பக்கச்சார்புடன் நோக்கப்பட்டுப் பாரபட்சமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றமையே காரணம் எனப் பலரும் உணருகிறார்கள்.

முதலமைச்சர் என்ற முறையில் நான் அண்மையில் பிரிட்டன், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்று புலம்பெயர்ந்தோரைச் சந்தித்துள்ளேன்.

எங்களுடன் அபிவிருத்தித் திறன், முதலீட்டு ஊக்குவிப்பு, கலாசாரப் பரிவர்த்தனை போன்றவற்றில் தங்களை இணைத்துக்கொள்வதில் அவர்கள் ஆவலாயுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் இந்தத் தீவின் ஒருமைப்பாட்டை உள்ளடக்கியே அதைச் செயற்படுத்த விரும்புகின்றனர்.

ஆனால், அவர்கள் இலங்கைக்கு வந்து தம்செயல்களை முன்னெடுக்கப் பின்நிற்கின்றனர். காரணம் அரசாங்கமும் அதன் உயர் அதிகாரிகளும் தங்கள் புலம்பெயர்ந்த மக்களைப் பற்றிக் கொண்டுள்ள அக்கறைகளில் அச்சம்கொண்டுள்ளனர். உங்கள் அதிகாரிகள் தேர்ந்தெடுத்த சிலர் மீது தடைகளை விதிக்கலாம். ஆனால், எல்லா நிறுவனங்களையும் மிகக் கடுமையாக்கி இங்கு மீண்டும் வருவதைத் தடுக்கும் செயல்களை வற்புறுத்த வேண்டாம் எனக் கோருகிறேன்.

சட்டவாதியாக 50 ஆண்டுகளையும் அதில் அரைவாசிக் காலம் நீதிபதியாகவும் இருந்தபடியால் நான் அரசின் பாதுகாப்பு அக்கறைகளைப் பற்றிய முழு அக்கறைகள் கொண்டவன் தான். ஆனால், நாம் எம் மக்கள் எல்லோரையும் பயங்கரவாதிகள் என்ற மனப்பாங்குடன் நோக்குவதை நிறுத்தவேண்டும்.

நாங்கள் எமது புலம்பெயர் மக்களை இங்கு பிரஜாவுரிமை உடையவர்களாக்கி அவர்களின் திறமைகளையும், செல்வத்தையும் எமது நலன்களுக்குப் பயன்படுத்தி எம்நாட்டில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவேண்டும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் தீ விபத்து!



யாழ். பல்கலைக் கழகத்தின் பெண்கள் விடுதியில் நேற்று பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

யாழ். பல்கலைக் கழகத்திற்கு அருகில் இராமநாதன் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பெண்கள் விடுதியின் முதலாம் மாடியிலேயே தீ விபத்து ஏற் பட்டுள்ளது. இதனால் விடுதியின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து ஏற்பட்ட விடுதியில் தங்கியிருந்த மாணவிகள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். மாணவிகள் எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை. விடுதியிலிருந்த பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்டபோது மாணவி ஒருவர் அந்த விடுதியில் உறங்கிக்கொண்டிருந்தார் எனவும் ஏனைய மாணவிகள் எழுப்பிய சத்தம் கேட்டே அவர் விடுதியை விட்டு வெளியேறினார் என்றும் கூறப்பட்டது.

தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீயணைப்புப் படையினரும், பொலிஸாரும், பல்கலைக்கழக சமூகத்தினரும் ஈடுபட்டனர். தீப்பரவல் ஏற்பட்ட பகுதி முழுவதும் புகைமண்டலமாகக் காட்சியளித்தது. அவ்விடத்துக்குள் உள்நுழைவதற்கு யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஓ)

*காணாமற்போனோரைக் கண்டறிய வலியுறுத்தி*

# சமூக வலைத்தளப் போராளிகள் நேற்று நல்லூரில் அணிதிரண்டு போராட்டம்

நல்லூர், ஜன.27

காணாமற்போனோரின் உறவினர்கள் வவுனியாவில் முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

வவுனியாப் போராட்டத்திற்கு ஆதரவாகப் போராட்டங்களில் ஈடுபட முன்வாருங்கள் என சமூக வலைத்தளங்களில் கோரிக்கைகள் விடப்பட்டன. அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த இளைஞர்கள் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் நல்லூரில் போராட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தனர்.

இதனிடையே, வவுனியா உண்ணாவிரதத்திற்கு ஆதரவை வெளிப்படுத்திய வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரது பாதுகாவலர் சங்கம் நேற்றுக் காலை நல்லூரில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தியது.

அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பிற்பகல் 4 மணியளவில் இளைஞர்களும் அணிதிரண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் நல்லாட்சி அரசாங்கத்தின் மீதான தமது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தினர்.

தாங்கள் எதிர்பார்த்து வாக்களித்தமைக்கு எதிராகவே தற்போதைய அரசு செயற்பட்டுவருகின்றது எனவும் அவர்கள் குற்றம் சுமத்தினர். காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிவதுடன் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல்கைதிகள் அனைவரையும் அரசு உடனடியாக நிபந்தனை இன்றி விடுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். (ம)

# மன்னார் சிவகரனை விடுவித்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜன.27

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழரசுக் கட்சியின் இளைஞரணிச் செயலாளராக இருந்த சிவகரனுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு சட்டமா அதிபரினால் நேற்று வாபஸ் பெறப்பட்டது. அதையடுத்து அவரை வழக்கில் இருந்து விடுவித்து சாவகச்சேரி நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் உத்தரவிட்டார்.

மறவன்புலோ, தனங்களப்புப் பகுதியில் தற்கொலை அங்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து 2016 ஏப்ரல் 28 ஆம் திகதி மன்னாரில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட சிவகரன், வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றினால் கடும் நிபந்தனைப் பிணையில் விடுவிக்கப்பட்டார். வெளிநாடு செல்லக் கூடாது, ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிறும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் பிரசன்னமாகிக் கையெழுத்திடவேண்டும் என்பன உட்படப் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. நேற்று இந்த வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி வழக்கை வாபஸ் பெறுகிறார் எனத் தெரிவித்ததை அடுத்து சிவகரன் எந்த நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட்டார்.

# அ' புரத்தில் ஐ.தே.க. கூட்டம் நாளை

கொழும்பு, ஜன.27

கூட்டு எதிரணி ஒழுங்கு செய்துள்ள கூட்டம் நுகேகொடையில் இன்று நடைபெறவுள்ள நிலையில் அந்தக் கூட்டத்துக்குப் பதிலளிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூட்டம் அநுராதபுரம் சாலியபுரவில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிராமியப் பொருளாதார அபிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம், கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம், அமைச்சர் ராஜித சேனாரட்ண, பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லத்தில் நேற்று நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்தியத் தூதுவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் முன்னர் இல்லாத வகையில் வலுவடையும். இருநாடுகளுக்குமிடைப்பட்ட வர்த்தகத் தொடர்புகள் எதிர்காலத்தில் விசேடமான முன்னேற்றத்தை அடையும். வேகமாக முன்னேற்றமடைந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தின் பிரதிபலன்கள் இலங்கைக்கும் கிடைக்கும் எனவும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கையில் கொல்லப்பட்ட இந்திய அமைதிப்படையினர் நினைவாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவிடத்திலும் இந்தியத் தூதுவர் அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை – யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் குடியரசுதின நிகழ்வுகள் நேற்றுக் காலை யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தலைமையில் நடைபெற்றன.

இங்கு கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, புதுக்குடியிருப்பு தேவிபுரம் இனியவாழ்வு இல்லம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

விசேட நிகழ்வாக மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன் பிரபல கர்நாடக சங்கீத வித்துவான் ராஜ்குமார் பாரதியின் உரை இடம்பெற்றது.

கண்டியில் உள்ள இந்திய இல்லத்திலும் குடியரசு தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இதன்போது இந்தியத்தேசியக் கொடி ஏற்றப்பட்டு இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது. கண்டி இந்திய துணை தூதுவர் ராதா வெங்கடராமன் சிறிய உரையை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்க உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (ஓ)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிய வருகிறது.

இந்த புத்தர் சிலைகள் ஏழும் மியன்மார் நாட்டின் சிற்பக் கலையை ஒத்ததாகக் காணப்படுகின்றன என பௌத்த மத குருக்கள் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட புத்தர் சிலைகள் தற்போது திருகோணமலை ஜெயசுமனராம விகாரையில் வைக்கப்பட்டுள்ளன. (சு)

## இறைமையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதி அலுவலகமொன்று திறக்கப்படுகின்றமை மிக முக்கியமான செயற்பாடாகும். இதை முன்னேற்றகரமான நடவடிக்கையாகவே கருதுகின்றோம். வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீரவின் மேற்பார்வையில் இது நடைபெறுவதனையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

மங்கள சமரவீர ஒரு முற்போக்குவாதி. இந்நாட்டிலே சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் சமத்துவத்தின் அடிப்படையிலே ஏற்பட வேண்டுமென்ற நம்பிக்கை கொண்டவர். அதற்காக உழைத்தவர். அவருடைய தலைமையின் கீழ் இந்த விடயங்கள் நடைபெறு வது பொருத்தமான விடயம் என்று நான் கருதுகின்றேன்.

வடக்கு மாகாணத்தில் பல லட்சம் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இலங்கைத் தீவில் வேறு எந்த ஒரு மாநிலங்களில் இருந்தும் அந்தளவிற்கு மக்கள் வெளிநாடுகளில் சென்று வாழவில்லை. குறிப்பாகத் தமிழ் மக்களில் 50 வீதமான மக்கள் தற்போதும் இந்த நாட்டில் இல்லை. அவர்கள் உலக நாடுகளில் பரந்து வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்களும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களும் தமக்குள் தொடர்புகொள்வதற்கு இந்த அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டமை பொருத்தமானது.

மக்களின் இறைமையின் அடிப்படையில் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றே நாம் நீண்டகாலமாகக் கோருகின்றோம். எமது காணி விடயங்கள், பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி மற்றும் பல விடயங்களில் மக்களின் இறைமையின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலமாக மக்கள் சுயநிர்ணய உரிமையை அடைய வேண்டும்.

இந்த நாட்டில் சமத்துவத்தின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம். அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றபோதிலும், சமீப வாரங்களில் பலதடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் 2017 ஆம் ஆண்டிற்குள் அது நிறைவேற்றப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம்.

எனவே, முற்போக்குச் சிந்தனை கொண்ட அனைவரும் ஒன்றாகத் திரண்டு நாட்டின் சுபீட்சத்தைக் கருத்திற் கொண்டு செயற்படவேண்டும். – என்றார்.

## சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு முறையிட்டுள்ளார்.

'நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னுடைய சிறப்புரிமைகள் சிறைச்சாலையில் மீறப்பட்டு வருகின்றன. சிறைச்சாலை அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும் என்னை தாமதமாகவே நாடாளுமன்றத்துக்கு அழைத்து வருகின்றார்கள். இதனால் நாடாளுமன்ற விவாதங்களுக்குத் தாமதமாக வர வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் நாடாளுமன்ற உறுப்பினருக்கான என்னுடைய சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன.' என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ஓ)

## உண்ணாவிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் வருகைதந்த இரா.சம்பந்தன் அதில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

வவுனியாவில் நடைபெறும் உண்ணாவிரதம் தொடர்பாக அவர் அங்கு கருத்துக் கூறுகையில் –

அந்த உண்ணாவிரதத்தில் நியாயம் இருக்கின்றது. அதை எவரும் மறுக்க முடியாது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தான் வவுனியாவுக்குச் சென்றபோது, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகள் என்னையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

குறிப்பாக காணாமற்போனோரின் மனைவிமார், தாய்மார்கள் என்னைச் சந்தித்தார்கள். அதனைத் தொடர்ந்து நாங்கள் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணையொன்றைக் கொண்டுவந்தோம்.

இதன் பின்னர் காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை திறப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது. பலவிதமான குழப்பங்களுக்கு மத்தியில் அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அது இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை.

காணாமற்போனோரின் பெற்றோர்கள், மனைவிமார்கள் வருகிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகள், கணவன்மார்கள் எங்கே என்று கேட்கின்றார்கள். இராணுவத்தால், பொலிஸா ரால் கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகள். தமது கணவன்மார்களுக்கு என்ன நடந்தது என்றே அறிய விரும்புகின்றார்கள்.

தங்கள் பிள்ளை, கணவன் உயிரோடு இருக்கின்றாரா இல்லையா என்பது பற்றி ஒரு விதமான தெளிவும் இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை தொடரக் கூடாது.

உண்மையை அறிந்து மக்களின் மனங்களில் ஒரு சமாதானம் ஏற்படக்கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். அவர்கள் மனதில் சாந்தி ஏற்படக்கூடியவகையில் முடிவெடுக்கப்படவேண்டும். அந்த முடிவு உத்தியோகபூர்வ முடிவாக இருந்து, அதன் மூலமாக பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் அல்லது மனைவிமார்கள் தங்கள் வாழ்க்கையை முன்னெடுக்கக் கூடியதான வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆனபடியால் உண்ணாவிரதப் போராட்டத்திலுள்ள நியாயத்தை எவரும் மறுக்க முடியாது. எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இங்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர இருப்பதால் இதற்கான தீர்வை ஏற்படுத்த வேண்டுமென்று மிகவும் அன்பாகக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். – எனச் சம்பந்தர் மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.